பக்கங்கள் 21+7

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆடி 27 திங்கட்கிழமை 12.08.2024 | அதிர்வு 11

## கட்டுப்பணம் செலுத்திய தமிழ்ப் பொது வேட்பாளர்



ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடவுள்ள தமிழ்ப் பொது வேட்பாளர் பா.அரிய நேத்திரனுக்கான 04

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




### தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பில் அங்கம் வகிக்கும்

# ரெலோ, புளொட், ஜ.போராளிகள் இன்று மாலை ரணிலுடன் பேச்சு!

தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பில் அங்கம் வகிக்கும் மூன்று கட்சிகள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பை ஏற்று இன்று மாலை அவரைச் சந்தித்துப் பேச இருக்கின்றன எனத் தெரிகின்றது.

தமிழ்ப் பொதுக்கட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தரப்புகளுக்கு ஜனாதிபதி செயலகத்தில் இருந்து தனித்தனியாக விடுக்கப்பட்ட அழைப்புகளின் அடிப்படையில் இந்த மூன்று கட்சிகளும் சந்திப்பில் பங்குபற்றுகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது. 04

## சுமந்திரன், சாணக்கியனுடன் கொழும்பில் சீனத் தூதர் பேச்சு



இலங்கைக்கான சீனத் தூதுவர் சீ சென்கொங்குக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், இரா.சாணக்கியன் ஆகியோருக்கும் இடையிலான சந்திப்பு கொழும்பிலுள்ள சீனத் தூதராலயத்தில் இன்று நடைபெற்றது. 04



## பொதுக்கட்டமைப்புக்கு சஜித்தும் அழைப்பு

(பிரபாகரன் டிலக்சன்)

தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்புடனான கலந்துரையாடலுக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. 04

## பயணிகள் கப்பல் சேவை 16ஆம் திகதி தொடங்கும்



தமிழகத்தின் நாகப்பட்டினம் – இலங்கையின் காங்கேசன்துறை இடையிலான பயணிகள் கப்பல் சேவை வரும் 16ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சேவையில் ஈடுபடும் “சிவகங்கை“ பயணிகள் கப்பல் 04

### பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு

## சம்பள உயர்வு ரூ. 1700 உறுதி

பெருந்தோட்டத்தொழிலாளர்களுக்கு 1700 ரூபா சம்பள உயர்வு வழங்குவதில் தாமதம் ஏற்பட்டிருந்த நிலையில், இன்று சம்பள நிர்ணய 04

# ரூ. 1700 உறுதிமொழியை நிறைவேற்றியுள்ளேன்!

## அமைச்சர் ஜீவன் பெருமிதம்



"பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்த சம்பளமாக 1700 ரூபாவை வழங்கும் தீர்மானம், சம்பள நிர்ணய சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதன்மூலம் சம்பள உயர்வு கிடைக்கவுள்ளது. மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றியுள்ளேன்." – என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

இதன்படி, பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான நாளாந்த அடிப்படை சம்பளமாக 1,350 ரூபாவும், உற்பத்தி ஊக்குவிப்பு விசேட கொடுப்பனவாக 350 ரூபாவும் வழங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அன்று 1000 ரூபா நாளாந்த சம்பளம் பெற்றுக்கொடுக்கப்படும் என உறுதியளித்தேன். அந்த உறுதிமொழியை நிறைவேற்றினேன். அதேபோல் 1700 ரூபா நாளாந்த சம்பளம் பெற்றுத் தருவதாக உறுதியளித்தேன். அந்த உறுதிமொழியும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

1,700 ரூபா தொடர்பில் சம்பள நிர்ணய சபை எடுத்த முடிவு பெரும் வெற்றியாகும்.

அத்துடன், 1700 ரூபா சம்பளம் உயர்வைப் பெற்றுத்தர முழு ஒத்துழைப்பு வழங்கிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்கார ஆகியோருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்." – என்றார்.




# காங்கேசன்துறையில் ரயிலில் தொடர்ச்சியாக டீசல் திருடிய கும்பல்!

## விசாரணைகள் ஆரம்பம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் – காங்கேசன்துறையில் ரயிலில் தொடர்ச்சியாக டீசல் திருடிய கும்பல் குறித்து விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன.


காங்கேசன்துறை ரயில் நிலையத்தில் இரவு வேளையில் ரயில் தரித்து நின்றபோது கடந்த 9ஆம் திகதி இனந்தெரியாத குழுவொன்று திருட்டில் ஈடுபட்ட சமயம், ரயில் நிலையத்தில் கண்காணிப்பில் ஈடுபட்ட அதிகாரிகளால் இந்தச் சம்பவம் அம்பலத்துக்கு வந்துள்ளது.

இதன்போது திருட்டில் ஈடுபட்ட கும்பல் தப்பிச் சென்ற நிலையில் நான்கு 20 லீற்றர் கொள்கலன்களில் டீசல் நிரப்பப்பட்ட நிலையில் கைப்பற்றப்பட்டுள்ளது.

ரயில் எரிபொருள் தாங்கியின் திறப்புக்கள் அனுராதபுரத்திலேயே இருக்கின்றன என்று கூறப்படும் நிலையில் குறித்த திருட்டுக்கு ரயில் நிலைய ஊழியர்களும் உடந்தையாகச் செயற்பட்டார்களா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

தொடர்ச்சியாக எரிபொருள் தாங்கியில் இருந்து எரிபொருள் திருடப்பட்டு வந்த நிலையில் குறித்த சம்பவம் தொடர்பாக காங்கேசன்துறை பொலிஸாரிடம் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக காங்கேசன்துறை பொலிஸார், ரயில் திணைக்களத்தினர் தனித்தனியே விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# சஜித்-த.மு.கூ. புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்து!

ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கும் மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணிக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை இன்று கைச்சாத்திடப்பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தி தலைமையகத்தில் நடைபெற்ற நிகழ்வில், சஜித் பிரேமதாஸவுடன் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி., பிரதித் தலைவர் ப.திகாம்பரம் எம்.பி., எம்.உதயகுமார் எம்.பி. ஆகியோர் கலந்துகொண்டனர்.

வேறு பணி நிமித்தம் எம்.பிகளான வே.இராதாகிருஷ்ணன், எம்.வேலுகுமார் ஆகியோர் கலந்துகொள்ளவில்லை.

மலையகத் தொழிற்சங்க முன்னணியின் செயலாளர் புஷ்பா, ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரசார செயலாளர், கேகாலை மாவட்ட அமைப்பாளர் பரணிதரன், கொழும்பு மாவட்ட அமைப்பாளர் பால சுரேஷ்குமார் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இது தொடர்பில் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் கருத்துக் கூறியாதாவது,

“மலையகத் தமிழ் மக்கள் நலன் சார்ந்த, இத்தகைய ஒரு பரந்துபட்ட ஒப்பந்தம், ஜனாதிபதி வேட்பாளர் ஒருவருடன் இதுவரை இந்நாட்டில் செய்யப்படவில்லை. நாம் எதிர்நோக்கும், அரசியல், சமூக, கலாசார, பொருளாதார சவால்களை ஆவணமாகத் தொகுத்து நாம் ஐக்கிய மக்கள் கூட்டணி ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையாக செய்து முடித்துள்ளோம். ஆகவே, இந்த நிகழ்வு இந்திய வம்சாவளி மலையக இலங்கையர் அரசியல் வரலாற்றில் முக்கியத்துவம் மிக்க நடப்பாக பதிவாகின்றது.

ஏழு அத்தியாயங்கள், நாற்பத்தி எட்டு அம்சங்களைக் கொண்ட இந்தப் பல்நோக்கு உடன்படிக்கை, “மலையக சாசனம்” என்றும், “மலையக சமூகத்துனான ஒப்பந்தம்” என்றும் கூறப்படுகின்றது என சஜித் பிரேமதாஸவும், நானும், திகாம்பரமும் நிகழ்வில் உரை நிகழ்த்தும்போது குறிப்பிட்டோம். இந்த ஆவணம் விரைவில் பொதுப் பார்வைக்காக வெளியிடப்படும்.


கல்வி, தொழில் பயிற்சி, இளைஞர் முன்னேற்றம், சுகாதாரம், போஷாக்கு, வாழ்வாதாரக் காணி, தொழில் வாய்ப்பு, வீடமைப்புக் காணி, அரச பொது நிர்வாக கட்டமைப்புக்குள் மலையகம், ஆட்சி உரிமையில் பங்கு ஆகிய தலைப்புகளின் கீழ் பல்வேறு விடயங்களை இந்த ஆவணம் புரிந்துணர்வு உடன்படிக்கையாகக் கவனம் செலுத்தியுள்ளது.

அதேவேளை, நாட்டின் அனைத்து மாவட்டங்களில் இருந்தும் தொழில் நோக்கில் கொழும்பு உட்பட மாநகரங்களில் குடிபெயர்ந்து நிரந்தரமாக வாழும் மக்கள் எதிர்நோக்கும் வீட்டு வசதி, கல்வி வாய்ப்பு போன்ற விசேட பிரச்சினைகளை பற்றியும் இந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கை கவனம் செலுத்துகின்றது.” – என்றார்.









# நாட்டை நிச்சயம் மீட்போம்!

## ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுவில் இன்று கையொப்பமிட்ட பின்னர் அநுர சபதம்



"பெரும் நெருக்கடிக்குள் இருந்த ஆளும் குழுவால் எமது நாடு அழுத்தப்பட்டுள்ளது. இதிலிருந்து எமது நாட்டையும் மக்களையும் மீட்டெடுப்பதற்கான சவாலை தேசிய மக்கள் சக்தி ஏற்றுக்கொள்ளத் தயார். எனவே, இன்று நான் வேட்புமனுவில் இட்ட இந்த கையொப்பம் நிச்சயமாக வெற்றிக்கான கையொப்பமிடலாக அமையும்." – என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் அக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

"இப்பொழுது ஏனைய பாசறைகள் ஒவ்வொரு குழுவாகப் பிரிந்து, சிதைந்து அழுக்குகளைச் சேகரிக்கும் நிலைக்கு மாறியுள்ளன. தேசிய மக்கள் சக்தியாகிய நாம் ஒன்றரை வருடங்களுக்கு முன்னரே எமது பயணத்தை சரியாக ஆரம்பித்தோம்.

நாங்கள் மிகவும் பலம் பொருந்திய வகையிலும் ஒழுங்கமைந்த வகையிலும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டி இற்றைவரை இந்தப் பயணத்தை தொடர்ந்துகொண்டிருக்கின்றோம்.

இன்னும் எங்களுக்கு ஒரு மாதத்தை விட சற்று அதிகமான நாட்கள்தான் இருக்கின்றன. இந்தக் கொஞ்ச நாட்களில் நாங்கள் மிகவும் பலம் பொருந்திய வகையில் எமது தேர்தல் இயக்கத்தை முன்னெடுத்துச் செல்வோம்.

கிராமங்களில் மிகவும் வலிமைமிக்க ஒரு ஒழுங்கமைப்பும் அதைப் போலவே, தேசிய மக்கள் சக்திக்குச் சொந்தமான பலம் பொருந்திய குழுக்களும் இருக்கின்றன. எனவே, இந்தத் தேர்தலை நிச்சயமாக எங்களால் வெற்றிகொள்ள முடியும்.

இந்தத் தேர்தலுக்குப் பின்னர் இந்த நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான சவாலையும், எமது நாட்டை வளமான நாடாக மாற்றுவதற்கான சவாலையும், மக்களுக்கு நல்ல வாழ்க்கையை உறித்தாக்கிக் கொடுப்பதற்கான சவாலையும் தேசிய மக்கள் சக்தி ஏற்றுக்கொள்ளத் தயார். எனவே, இன்று வேட்புமனுவில் நான் இட்ட இந்தக் கையொப்பம் இந்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிகரமான கையொப்பமிடலாக அமையும் என்பது நிச்சயம்." – என்றார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### ரெலோ, புளொட்...

ரெலோ, புளொட், ஜனநாயகப் போராளிகள் கட்சி ஆகியவையே இன்று மாலை ஜனாதிபதியை சந்திக்கின்றன.

தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் எம்.பியும் இன்றைய சந்திப்புக்கு வருவதற்கு இணங்கி இருந்தார். எனினும். உடற்சுகவீனம் காரணமாக அவர் பங்குபற்றமாட்டார் எனச் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன. எனினும், தமது இயலாமை குறித்து அவர் ஜனாதிபதி செயலகத்துக்குத் தெரியப்படுத்தியிருக்கின்றார் என ஒரு தகவல் தெரிவித்தது.

முன்னதாக இன்றைய சந்திப்பைத் தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு முன்னெடுக்காது எனப் பொதுக் கட்டமைப்பின் சார்பில் நேற்று தெளிவான அறிக்கை வெளியிடப்பட்டிருந்தது.

அந்தப் பின்புலத்தில் மேற்படி மூன்று கட்சிகளும் பொதுக் கட்டமைப்பின் பிரதிநிதிகளாக அல்லாமல் தங்களுக்கு தனித் தனியாக கிடைத்த அழைப்பை ஏற்று ஜனாதிபதியை சந்திக்கும் ஒழுங்கில் இன்றைய நிகழ்வில் பங்குபற்றுகின்றன எனத் தெரிவிக்கப்பட்டது.

### கட்டுப்பணம்...

கட்டுப்பணம் இன்று செலுத்தப்பட்டது.

சி.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணியின் மத்திய குழு உறுப்பினரான த.சிற்பரன், பொது வேட்பாளருக்கான கட்டுப்பணத்தைச் செலுத்தினார்.

### பொதுக்கட்டமைப்புக்கு...

பொதுக் கட்டமைப்பில் அங்கம் வகிக்கும் அனைவருக்கும் தனித்தனியாக சஜித் பிரேமதாஸவால் இன்று அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

எனினும், இந்தக் கலந்துரையாடலில் தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பாகத் தாங்கள் கலந்துகொள்ளமாட்டோம் என்று தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இன்று மாலை தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பினருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று ஜனாதிபதி செயலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலிலும் பொதுக் கட்டமைப்பினர் கலந்துகொள்ளாத போதும் பொதுக் கட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ரெலோ, புளொட், ஜனநாயகப் போராளிகள் கட்சி ஆகிய அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்துகொள்வார்கள் எனத் தெரிகின்றது.

### சம்பள உயர்வு...

சபையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் இறுதித் தீர்வு எட்டப்பட்டுள்ளது. வாக்கெடுப்பு மூலமாக 1700 ரூபா சம்பளம் வழங்கத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

சம்பள நிர்ணய சபை இன்று கூடிய போதே இது தொடர்பில் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

வாக்கெடுப்பின்போது சம்பள உயர்வுக்கு ஆதரவாக 14 வாக்குகள் அளிக்கப்பட்டன. எதிராக மூன்று பெருந்தோட்ட நிறுவனங்கள் வாக்களித்துள்ளன.

இதன்படி பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான நாளாந்த அடிப்படை சம்பளமாக 1,350 ரூபாவும், வருகை ஊக்குவிப்பு விசேட கொடுப்பனவாக 350 ரூபாவும் வழங்க இணக்கம் எட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில், சம்பள உயர்வு விவகாரம் உயர்நீதிமன்றத்துக்கு எடுத்து செல்லப்பட்ட நிலையில், நீதிமன்றத்தால் முன்வைக்கப்பட்ட திருத்தங்கள் உள்வாங்கப்பட்டு, 1700 ரூபா சம்பளம் உயர்வைப் பெற்றுத்தர முழு ஒத்துழைப்பு வழங்கிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்கார ஆகியோருக்கு கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமான் நன்றி தெரிவித்துள்ளார்.

மேலும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தோட்டத் தொழிலாளர்களுக்கு 1700 ரூபா சம்பளத்தை முன்மொழிந்தது போல் அதனை மக்களுக்குப் பெற்றுக்கொடுக்கும் முழுப்பொறுப்பும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கு உள்ளது என்றும் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

1700 ரூபா சம்பளம் கிடைக்க ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் செந்தில் தொண்டமான் நன்றி தெரிவித்துள்ளார்.

### பயணிகள் கப்பல்...

இரண்டு இடங்களுக்கும் இடையிலான வெள்ளோட்டப் பயணத்தை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்து இருப்பது தெரிந்ததே.

இந்தக் கப்பல் சேவைக்கான பதிவுகளை இன்று நள்ளிரவு முதல் இணையவாயிலாகவும் செயலி மூலமாகவும் மேற்கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது.

மேலதிக விவரங்கள் நாளை மாலை நான்கு மணிக்கு நாகப்பட்டினம் துறைமுக வளாகத்தில் நடைபெறும் ஊடகவியலாளர் சந்திப்பில் அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சுமந்திரன்...

சீனத் தூதுவரின் அழைப்பின் பேரில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் தற்போதைய முக்கிய விடயங்கள் சம்பந்தமாகவும், வடக்கு – கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் கரிசனைகள் தொடர்பாகவும் இரு தரப்பினரும் சிநேகபூர்வமாகக் கலந்துரையாடினார்கள்.





# கவிப்பேரரசு வைரமுத்து தொகுத்த கவிதை நூலில் அஸ்மின் கவிதை!

(எம். எப். றிபாஸ்)

கவிப்பேரரசு வைரமுத்து தொகுத்த “கலைஞர் 100 கவிதைகள் 100” கவிதை நூலின் அறிமுகவிழா அண்மையில் சென்னை கலைஞர் அரங்கில் நடைபெற்றது.

கலைஞர் நூற்றாண்டு விழா நிறைவை முன்னிட்டு தொகுக்கப்பட்டுள்ள இத்தொகுப்பில் தமிழின் மிகச் சிறந்த 100 கவிஞர்களது கவிதைகள் இடம்பெற்றுள்ளன.

இந்த நூற்றாண்டின் மிகச்சிறந்த தமிழ் கவிஞர்கள் எனப்போற்றப்படும் புரட்சி கவிஞர் பாரதிதாசன், கவியரசர் கண்ணதாசன், அ.மருதகாசி, கவியோகி சுத்தானந்த பாரதி, கவிஞர் சுரதா, கவிக்கோ அப்துல் ரஹ்மான், வாலிபக் கவிஞர் வாலி, ஈரோடு தமிழன்பன், கவிஞர் அ.முத்துலிங்கம், மு.மேத்தா, உணர்ச்சிக் கவிஞர் காசியானந்தன், பிறைசூடன், பழனிபாரதி, நா.முத்துக் குமார், வித்தகக் கவிஞர் பா.விஜய், கபிலன், விவேகா, மனுஸ்ய புத்திரன், சல்மா, இயக்குனர் சீனுராமசாமி, இயக்குனர் லிங்குசாமி என நீளும் இந்தப் பட்டியலில் பிரபல இலங்கை கவிஞர், தமிழ் திரைப்பட பாடலாசிரியர் பொத்துவில் அஸ்மின் எழுதிய “திருக் குவளை சூரியன்” என்ற கவிதையும் இடம்பெற்றுள்ளது.

இந்த நூலின் வெளியீட்டு விழா கலைஞர் நினைவு நாளான கடந்த 07 ஆம் திகதி முதலமைச்சர் உத்தி யோகபூர்வ இல்லத்தில் வைத்து தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட திராவிட கழகத்தலைவர் ஆசிரியர் கி.வீரமணி பெற்றுக்கொண்டார்.

இத்தொகுதியின் அறிமுக விழா கலைஞர் அரங்கில் அதே தினம் மாலை கவிப்பேரரசு வைரமுத்து தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சிறப்பு கவிஞராக அழைக்கப்பட்ட கவிஞர் பொத்துவில் அஸ்மினுக்கு தமிழ் நாடு நெடுஞ்சாலை துறை அமைச்சர் எ.வ.வேலு சிறப்பு பிரதி வழங்கி பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.



நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# வறுமை நிலைமை

இலங்கையின் உத்தியோகபூர்வ வறுமைக் கோட்டு எல்லை ஒரு தசாப்த காலப்பகுதிக்குள் மூன்று மடங்கு அதிகரித்துள்ளதாக மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களத்தின் சமீபத்திய அறிக்கை வெளிப்படுத்தியுள்ளது.

உத்தியோகபூர்வ வறுமைக் கோடு எல்லை என்பது உணவு, தங்குமிடம் மற்றும் குடிதண்ணீர், அடிப்படைக் கல்வி, சுகாதாரம், வாழ்க்கைத் தரம் போன்ற அடிப்படையான - அத்தியாவசியமான - வாழ்க்கைச் செலவுகளை ஈடுகட்ட தனிநபர் குடும்பத்திற்குத் தேவைப்படும் குறைந்தபட்ச வருமானத்தைக் குறிக்கும் அளவீடாகும்.

இதுவே இங்கையில் ஒரு தசாப்த காலத்தில் மூன்று மடங்காக எகிறியிருக்கின்றது.

இது தொடர்பான அறிக்கையில் வறுமைக் கோடு ரூ. 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் 5,223 ரூபாவாக இருந்ததாகக் கூறப்படுகின்றத். ஆனால் இதுவே இந்த ஆண்டு ஜனவரிக்குள் 17,014 ரூபாவாகிவிட்டது. அதாவது இப்போது தனி நபர் வருமானம் மாதத்துக்கு ரூ.17,014 இற்குக் குறைவு என்றால் வறுமைக் கோட்டுப் பிடிக்குள் சிக்கிக் கொண்டுள்ளதாக அர்த்தம்.

2013 இல் ரூ. 5,223 ஆகப் பதிவு செய்யப்பட்ட வறுமைக் கோட்டு எல்லை, 2016 ஆம் ஆண்டில் 6,117 ரூபாவாக இருந்து பின்னர், 2019 இல் 6,966 ரூபாவாக உயர்ந்தது.

எவ்வாறாயினும், 2022 இல் பொருளாதார நெருக்கடி பொருளாதார மற்றும் சமூக அழிவை ஏற்படுத்திய நிலையில், பணவீக்கம் உயர்ந்து வறுமைக் கோட்டு எல்லையை இருமடங்குஅதிகரிப்புக்குத் தள்ளியது. அதனால் 2022 இல் வறுமைக் கோடு எல்லை ரூ. 15,970 என்று அறிக்கை கூறுகிறது.

அறிக்கையின்படி, கொழும்பில் மிக உயர்ந்த வறுமைக் கோடு எல்லை பதிவாகியது. அந்த ஜனவரியில் 18,350 ரூபாவாக இருந்த இந்தக் கணக்கீடு மே மாதத்தில் குறைந்து 17,608 ரூபாவானது.

மாவட்ட வாரியான வறுமைக் கோட்டுடன் ஒப்பிடுகையில் கொழும்பு மாவட்டம் முதலிடத்தைப் பெற்றுள்ளது. இந்த ஆண்டு மே மாதத்தில் ரூ.17,608 ஆக அது குறைந்துள்ளது.

கம்பஹா மாவட்டம், அண்டை மாவட்டமான தலைநகர் கொழும்புக்கு அடுத்து வறுமைக் கோட்டு எல்லை உச்சத்தில் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது. அங்கு வறுமைக் கோட்டு எல்லைப் பெறுமதி ரூ.17,517. அதைத் தொடர்ந்து நுவரெலியா ரூ. 17,169.

மொனராகலை, கிளிநொச்சி மற்றும் அம்பாந்தோட்டை போன்ற ஏனைய மாவட்டங்கள் வறுமைக் கோட்டுடன் குறைந்த இடங்களைப் பெற்றுள்ளன. அங்கு முறையே இந்தப் பெறுமதி ரூ15,610, ரூ. 15773 மற்றும் ரூ.15,862.

சுமார் நான்கு மாதங்களுக்கு முன்னர் வெளியிடப்பட்ட இலங்கை தொடர்பான உலக வங்கியின் அறிக்கை, கடந்த நான்கு வருடங்களில், வறுமை பெருமளவில் அதிகரித்துள்ளதை வெளிப்படுத்துகின்றது.

வறுமை 2019 இல் 11 சதவீதத்திலிருந்து 2024 இல் கிட்டத்தட்ட 26 சதவீதமாக அதிகரித்துள்ளது. இலங்கையின் சனத் தொகையில், கால் பகுதிக்கும் அதிகமானோர் வறுமையில் வாழ்கின்றனர், என்பதே இதன் பொருளாகும்.

இலங்கையில் உள்ள, ஏறத்தாழ 60 வீதமான குடும்பங்களின் வருமானம் வீழ்ச்சியடைந்துள்ளதாகவும், பலர் உணவுப் பாதுகாப்பின்மை, ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் வளர்ச்சிக் குறைபாடு போன்றவற்றை எதிர்கொள்கின்றனர் எனவும் உலக வங்கியின் அறிக்கை குறிப்பிடுகிறது.

எவ்வாறாயினும், இந்தப் பரந்தளவிலான சமூக அழிவு மற்றும் துயரத்தின் நீடித்ததன்மையிலிருந்து மீள்வதற்கான வழிவகை தெரியாது நாடு கும்மிருட்டில் வழி புரியாது குருட்டாம் போக்கில் பயணித்துக் கொண்டிருக்கின்றது என்பதுதான் சோகம் கலந்த நிஜம்.





# மன்னார் மாவட்ட விளையாட்டு துறையின் அபிவிருத்தி தொடர்பாகக் கலந்துரையாடல்

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் மாவட்டத்தின் விளையாட்டு துறையில் அபிவிருத்தி செயல்பாடுகளினை முன்னெடுப்பதற்காகவும், எதிர் காலத்தில் விளையாட்டுத்துறையை மேம்படுத்தி சிறந்த முறையில் நடத்திச் செல்வதற்குமான கலந்துரையாடல் அரச அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் மாவட்ட செயலகத்தின் மருதம் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

கலந்துரையாடலில் மாவட்டத்தின் விளையாட்டு துறையின் பிரதிநிதித்துவம் வழங்கும் வகையில் பிரதேச செயலாளர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

பல்வேறு விளையாட்டுத் துறைகளையும் மேம்படுத்தும் முகமாக ஒவ்வொரு விளையாட்டுத் துறைக்குமான பொறுப்பான உறுப்பினர்கள் கொண்ட குழு தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





# நிலைமாறு கால நீதி தொடர்பில் தெளிவூட்டும் செயலமர்வு!

(பழுவூரான்)

நிலைமாறு கால நீதி தொடர்பாக மாவட்ட மட்டத்தில் கடமையாற்றும் அரச உத்தியோகத்தர்களைத் தெளிவூட்டும் செயலமர்வு மட்டக்களப்பில் இடம் பெற்றது.

தேசிய சமாதானப் பேரவையினால் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் "நீதி மற்றும் பொறுப்புக் கூறலுக்கான மக்கள் ஒன்றிணைவு" எனும் தொனிப்பொருளில் முன்னெடுக்கப்படும் பூஜா திட்டத்தின் ஒரு அங்கமாக நிலைமாறுகால நீதி அரச அதிகாரிகளுக்கான மாவட்ட அளவிலான தகவல் அமர்வு மட்டக்களப்பு கல்லடியில் உள்ள தனியார் விடுதியில் இடம் பெற்றது.

தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு வண்ணாத்திப் பூச்சி சமாதான பூங்காவின் இணைப்பாளர் து.நகுலேஸ்வரனின் இணைப்பாக்கத்தில் இடம்பெற்ற செயலமர்வுக்குப் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் கலந்து கொண்டார்.

தேசிய சமாதானப் பேரவையின் இணை முகாமையாளர் நாகரெட்ணம் விஜயகாந்தின் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் நாட்டின் சுதந்திரம், சிறுவர் உரிமைகள், பெண்களுக்கான உரிமைகள் மற்றும் உண்மையைக் கண்டறிதல் போன்ற விடயங்கள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

சிரேஷ்ட சட்டத்தரணியும், கிழக்குப் பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தருமான பேராசிரியர் தங்கமுத்து ஜெயசிங்கம் இதன் போது வளவாளராகக் கலந்து கொண்டார்.

செயலமர்வில் மட்டக்களப்பு மாவட்ட செயலக உதவி மாவட்ட செயலாளர் ஜீ.பிரணவன், தேசிய சமாதானப் பேரவையின் கண்காணிப்பு மற்றும் மீளாய்வுக்கான தேசிய இணைப்பாளர் நிலக்ஷி தவராஜா, தேசிய சமாதானப் பேரவையின் மட்டக்களப்பு மாவட்ட சர்வமதக் குழுவின் இணைப்பாளர் இ.மனோகரன், நிர்வாக உத்தியோகத்தர்கள், தேசிய ஒருமைப்பாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், கலாசார உத்தியோகத்தர்கள் மற்றும் சட்டத்தரணிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.


EVEREST
FURNITURE
MODERN FURNITURE FOR YOUR HOME

(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ MIX 1C1 SCARBOROUGH, CANADA

# லுணுகலை முத்துமாரியம்மன் திருவிழா

(நடராஜா மலர்வேந்தன் )

லுணுகலையில் அமையப்பெற்றுள்ள ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 15 ஆம் திகதி வியாழக்கிழமையன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இதனைத்தொடர்ந்து மறுநாள் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரலக்ஷ்மி பூஜையும் அடியார்கள் கற்பூர சட்டி ஏந்தும் பூஜையும், 17 ஆந்திகதி சனிக்கிழமை பாற்குடபவனியும் வேட்டைத்திருவிழாவும் நடைபெறும்.

தொடர்ந்து 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அம்மனுக்கு பக்த அடியார்கள் நேர்த்திக்கடன் தீர்க்கும் காவடிகளும் தீ மிதித்தலும் நடைபெற்று அன்னதானம் வழங்கப்படும்.

19 ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த் திருவிழாவும் 20 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை தீர்த்தோற்சவமும் பூங்காவன திருவிழாவும் நடைபெறவுள்ளன.

இதனையடுத்து 22 ஆந்திகதி புதன்கிழமை கரக ஊர்வலம் நடைபெறவுள்ளதோடு 23 ஆம் திகதி வியாழக்கிழமை வைரவர் மடை இடம்பெறும்.



# கணினி உபகரணங்கள் வழங்கல்!

(றாசிக் நபாயிஸ்)

நாவிதன்வெளி பிரதேச செயலக மத்திய முகாம் - 02 கிராம சேவகர் பிரிவில் சுமார் 14 வருட காலமாக இயங்கி வரும் நிலைபேறான விவசாய வளங்களின் நிலையம் (சார்க்) அலுவலகத்துக்கு கணினி உபகரணங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு சார்க் நிறுவனத்தின் முகாமையாளர் இ. இதயகுமாரின் ஒருங்கிணைப்பில் சார்க் அமைப்பின் வளாகத்தில் தலைவர் எஸ். புலேந்திரன் தலைமையில் இடம்பெற்றது.



14 வருட காலமாக கொமர்ஷல் வங்கியுடன் இணைந்து இலங்கை மத்திய வங்கியால் விவசாயிகளுக்கு விஷேடமாக வழங்கப்படுகின்ற கடன் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறார்கள் இந்தச் சார்க் அமைப்பினர்.

இவ்வாறான செயற்பாடுகளை விருத்தி செய்யவும், அலுவலக வேலைகளை இலகுபடுத்திக் கணினி மயப்படுத்தி வெற்றிகரமாக நடத்தி செல்லும் நோக்கிலும் இந்தக் கணினி உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக கொமர்ஷல் வங்கியின் மட்டக்களப்பு மாவட்ட முகாமையாளர் ஆர். கஜரூபன் கலந்து கொண்டார்.

கௌரவ அதிதிகளாக சார்க் நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரி இ. சந்திரசேகரன், கொமர்ஷல் வங்கியின் கல்முனை கிளை முகாமையாளர் சி. பேபியன், கொமர்ஷல் வங்கியின் மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய அதிகாரி வீ. சம்பத், கொமர்ஷல் வங்கியின் தலைமைக் காரியாலைய கடன் பிரிவுக்கு பொறுப்பான எஸ். செந்தூரன், ரி. அனோஜ் போன்றோர் கலந்து கொணடனர்.

சிறப்பு அதிதிகளாக மத்திய முகாம் - 02 ஆம் பிரிவின் கிராம சேவகர் கே. கெப்ரியல், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜீ. வினிதா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் பெறுமதியான கணினி உபகரணங்களை சார்க் நிறுவனத்தின் தலைவர் எஸ். புலேந்திரனிடம் கொமர்ஷல் வங்கியின் மட்டக்களப்பு மாவட்ட முகாமையாளர் ஆர். கஜரூபனால் வழங்கி வைத்தார்.



# சிறுவர்களின் உரிமையைப் பாதுகாத்தல் தொடர்பான சமூகமட்ட ரீதியான நிகழ்வு!

(பழுவூரான்)

விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் முரண்பாடுகளுக்கு உள்ளான சமூகங்களில் உள்ள சிறார்களின் உரிமைகளைப் பாதுகாத்தலும் மேம்படுத்தலும் தொடர்பான செயலமர்வு நடத்தப்பட்டது.

கே.என்.எச். நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் “இளந்தளிர்” எனும் வேலைத் திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர்பற்று மற்றும் கோறளைப்பற்று வடக்கு இரு பிரதேச செயலாளர் பிரிவுகளில் கடந்த 2023 ஆம் ஆண்டில் இருந்து பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் அடிப்படையில் ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பிள்ளைகள் தமது உரிமைகளைப் பெற்றுக் கொள்ள வாய்ப்புக்களையும் சந்தர்ப்பங்களையும் ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கில் அதற்கான தளம் ஒன்று வந்தாறுமூலை கிழக்கு 197 சி எனும் கிராம உத்தியோகத்தர் பிரிவில் பிரதேச செயலாளரின் அனுமதியுடன் உத்தியோக பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் திட்டத்துக்காகத் தெரிவு செய்யப்பட்ட திட்டக் கிராமங்களான வந்தாறுமூலை எழுச்சிக் கிராமம், மாவடிவேம்பு, களுவன்கேணி 1,2 வந்தாறுமூலை, பலாச்சோலை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த சிறுவர்கள், பெற்றோர்கள் உட்பட சுமார் 100 பேர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வின் பிரதம அதிதியாக ஏறாவூர்பற்றுப் பிரதேச சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் ஏ.ஆர். ஆருசைத் கலந்து கொண்டார்.

இதன்போது வளவாளராக கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் எஸ். தருமலிங்கம், கிராம உத்தியோகத்தர் எஸ். உதயதேவா, விழுது நிறுவன திட்ட உத்தியோகத்தர் திருமதி பு.ஜீவிதா, சிரேஷ்ட சமூக வலுப்படுத்துனர் திருமதி சி.சுகிர்தவிழி, நிர்வாக அலுவலர் க.நிர்மலா மற்றும் திட்டத்தின் கண்காணிப்பு, மதிப்பீட்டு ஆலோசகர் திரு.வீ.குகதாசன் விழுதினால் இலகுபடுத்துனர்களான பயிற்றுவிக்கப்பட்ட இளையோர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இந்த நிகழ்வின் போது சிறுவர்களது உரிமைகளை மேம்படுத்துவதில் சிறுவர்கள் மற்றும் பெற்றோர்கள் எதிர் நோக்கும் பிரச்சனைகள் மற்றும் சவால்களை அறிந்து அதற்கேற்றாற்போல் அவர்களது ஆற்றலை விருத்தி செய்வதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை வடிவமைப்பது தொடர்பாக ஆராயப்பட்டது.







குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998





# அக்கரைப்பற்றில் இரத்ததான முகாம்

(றிஸ்வான் சாலிஹு)

அக்கரைப்பற்று அஹ்லுஸ்ஸுன்னாஹ் ஜும்ஆ பள்ளிவாசலின் ஏற்பாட்டில், அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் இரத்த வங்கியில் காணப்படும் இரத்த தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் முகமாக, மாபெரும் இரத்ததான முகாம் நேற்று ஞாயிற்றுக்கிழமை (11) அக்கரைப்பற்று அஹ்லுஸ் ஸுன்னாஹ் ஜும்மா பள்ளிவாசலில், அதன் தலைவர் அஷ்ஷேக். அப்துல் ஹமீட் தலைமையில் நடைபெற்றது.

ஆண்கள், பெண்கள் என கலந்து கொண்ட இந்த மாபெரும் இரத்தான முகாமில், 230 பேர் கலந்து கொண்டதில் 206 பேரின் இரத்தம் பெறப்பட்டு அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை இரத்த வங்கிக்கு வழங்கப்பட்டது.

இந்தப் பள்ளிவாசல் நிர்வாகமானது இந்தப் பிராந்தியத்தில் உள்ள வைத்தியசாலைகளில் நிலவும் இரத்த தட்டுப்பாட்டை அறிந்து ஆறு மாதங்களுக்கு ஒருமுறை இந்த இரத்ததான முகாமை நடத்தி பாரிய சமூகத் தேவையை நிவர்த்தி செய்து வருகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.





# மூன்றாம் நிலைக் கல்வி கற்ற மாணவர்களுக்குச் சான்றிதழ்

(எம்.எம்.றம்ஸீன்)

காரைதீவு பிரதேச செயலர் பிரிவில் கல்வியமைச்சின் மூன்றாம் நிலைக் கல்வித் திட்டத்தை பூர்த்தி செய்த மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

கல்வியமைச்சின் திட்டத்திக்கமைய 2024 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான மூன்றாம் நிலை கல்வி, தொழில் கல்வி, பயிற்சி மற்றும் தொழில் வாய்ப்புக்கள் தொடர்பாக காரைதீவு விபுலானந்த மத்திய கல்லூரியில் நடைபெற்றது. இதில் 3 மாத பயிற்சி நெறியை நிறைவு செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

காரைதீவு பிரதேச செயலாளர் திருமதி ஆர்.ராகுலநாயகி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதேச செயலக உத்தியோஸ்தர்களும், பயிற்சி மாணவர்களும் கலந்து கொண்டனர்.








# 74 ஆவது வருடத்தை எட்டிய ஹிரோஷிமா - நாகசாகி மீதான தாக்குதல்!

**( ஒகஸ்ட் 6 அணுவாயுதம் பரீட்சிக்கப்பட்டு ஹிரோஷிமா மீது வீசப்பட்ட நாள். ஒகஸ்ட் 9 நாகசாகி மீது வீசப்பட்ட நாள்.)**

இன்று உலகை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கின்றன கொரோனா உயிரியல் யுத்தத்தைப் போன்று, அன்று ஒகஸ்ட் 6, 1945, இந்த உலகமே மறக்க முடியாதபடி, உலகின் முதல் அணுகுண்டு ஜப்பான் நாட்டின் ஹிரோஷிமா நகர்மீது வீசப்பட்ட நாள். பின்னர் ஒகஸ்ட் 9, 1945 அன்று நாகசாகிமீது வீசப்பட்டது இரண்டாவது அணுகுண்டு. இதுநாள் வரையில் இதன் தாக்கங்களைச் சுமந்து கொண்டிருக்கும் ஜப்பான், இன்று ஹிரோஷிமா குண்டுவெடிப்பின் 74 ஆவது நினைவு நாளை அனுஷ்டித்து வருகிறது.

இரண்டாம் உலகப் போரின் காரணமாக ஜப்பான், அமெரிக்காவின் முத்து துறைமுகத்தைத் தாக்கவே அதற்குப் பதிலடி கொடுக்க விரும்பியது அமெரிக்கா. அதற்காக ஜப்பான் மீது குண்டு வீசுவதற்கான இறுதி உத்தரவு ஒகஸ்ட் 2 ஆம் திகதி பிறப்பிக்கப்பட்டது.

தற்காலத்தில் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் கண்டனம் மற்றும் உலக நாடுகளின் எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல் வட கொரியா தொடர்ந்து அணு ஆயுதங்களையும், கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளையும் சோதித்து வந்தது. அமெரிக்கா விதித்த பொருளாதாரத் தடைகளையும் கண்டு கொள்ளவில்லை .

அமெரிக்காவுக்குப் பெரும் தலைவலியைக் கொடுக்க, இரு நாடுகளுக்கும் இடையே போர் பதற்றம் உருவானது. பின்னர் கடந்த ஆண்டு ஜுன் மாதம் 12 ஆம் திகதி சிங்கப்பூரில் அமெரிக்க ஜனாதிபதி டிரம்பும், வடகொரிய தலைவர் கிம் ஜாங் அன்னும் சந்தித்து பேசினர். அப்போது, கொரிய தீபகற்பத்தை அணு ஆயுதங்கள் இல்லாத பகுதியாக மாற்ற வடகொரியா முன்வந்தது. இது தொடர்பாக இரு தரப்பிலும் ஒப்பந்தம் கையெழுத்தானது. அதன் பின்னர் ஆயுத சோதனைகளை வடகொரியா நிறுத்தியது.

அமெரிக்காவுடனான இரண்டாம் கட்ட பேச்சு வார்த்தையில் எந்த முடிவும் எட்டப்படாத நிலையில், வடகொரியா மீண்டும் ஆயுத சோதனையைத் தொடங்கி உள்ளது. சமீபத்தில் குறுகிய தூரம் சென்று தாக்கக்கூடிய ஏவுகணைகளை சோதனை செய்தது. இதற்கு உலக நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன. ஆனால், இது தற்காப்புக்காக நடத்தப்பட்ட பயிற்சிதான் என வடகொரியா விளக்கம் அளித்துள்ளது.



என்.ஹரன்

இந்த நிலையில், வடகொரியாவின் இந்த செயல் உலக அமைதிக்கு அச்சுறுத்தலாக இருப்பதால், அணு ஆயுதங்கள் மற்றும் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகள் மற்றும் அது தொடர்பான சோதனை திட்டங்களை கைவிட வேண்டும் என்று 70 நாடுகள் வலியுறுத்தி உள்ளன.

இதுதொடர்பாக பிரான்ஸ் நாடு கொண்டு வந்த இந்த வரைவு அறிக்கையில், அமெரிக்கா, தென் கொரியா மற்றும் ஆசிய நாடுகள், லத்தீன் அமெரிக்க நாடுகள், ஐரோப்பிய நாடுகள் என மொத்தம் 70 நாடுகள் கையெழுத்திட்டுள்ளன. வடகொரியாவை ஆதரிக்கும் சீனாவும் ரஷ்யாவும் இந்த அறிக்கையில் கையெழுத்திடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஹிரோஷிமா, கோகுரா, நாகசாகி மூன்று நகரங்களும் இறுதி இலக்குகளாக முடிவு செய்யப்பட்டு ஒகஸ்ட் 6 ஆம் திகதி அதிகாலை 1.45 மணிக்கு (ஜப்பான் நேரம்) அணு குண்டைச் சுமந்துகொண்டு 'எனோலா கே' என்ற பி-29 ரக விமானம் புறப்பட்டது. 'லிட்டில் பாய்' என்ற அந்த குண்டு, இன்றுவரை உலகம் பார்த்த மிக மோசமான பேரழிவை ஹிரோஷிமா மீது கட்டவிழ்த்தது.

இந்தத் தாக்குதல் பல லட்சக் கணக்கான மக்களைக் கொன்று குவித்து இன்று வரையில் அதன் ரணங்களை விரவச்செய்து வருகிறது.

குண்டுவீச்சுத் தாக்குதல் நடந்த 72 ஆவது நினைவு தினம் ஜப்பானிலுள்ள அமைதிப் பூங்காவில் இன்று அனுசரிக்கப்பட்டது. ஜப்பான் பிரதமர் உள்ளிட்ட பல முக்கியப் பிரமுகர்கள் கலந்துகொண்ட இந்த அஞ்சலிக் கூட்டத்தில் 'உலகில் அமைதி நிலவ, அணு ஆயுதங்களை ஒழிக்க வேண்டும். இதற்கான இயக்கத்தை தலைமையேற்று வழிநடத்தவும் ஜப்பான் தயாராக உள்ளது' என அறிவிக்கப்பட்டது.

உலக வரலாற்றில் மிகக்கொடூரமான தக்குதல்

தொடர்ச்சி▼



# 74 ஆவது வருடத்தை எட்டிய ஹிரோஷிமா - நாகசாகி மீதான தாக்குதல்!

தொடர்ச்சி▲

என்றால் அது ஜப்பான் மீதுஅமெரிக்க நடத்திய அணு ஆயுதத் தாக்குதல்தான். 1945 ஆம் ஆண்டு ஓகஸ்டு மாதம் 6 ஆம் திகதி ஜப்பானின் ஹிரோஷிமா நகரத்தின் மீது " லிட்டில் போய்" என்ற அணுகுண்டை அமெரிக்கா வீசியது. மூன்று நாள்கள் கழித்து நாகசாகி நகரத்தின் மீது "பட் போய்" என்ற அணுகுண்டை வீசியது . இந்த குண்டு வீச்சால் ஏற்பட்ட மரணங்களும் சேதமும் இன்றுவரை துல்லியமாக மதிப்பிடமுடியவில்லை.

சுமாராகக் ஹிரோஷிமாவில் மட்டும் குறைந்தபட்சம் 1, 40,000 பேரும் நாகசாகியில் 74,000 பேரும் மரணமடைந்தனர். இந்த தாக்குதலின் கதிர்வீச்சால் பாதிக்கப்படவர்களின் நிலை மிகவும் மோசமாயிருந்தது. குண்டு வீச்சு நிகழ்ந்து பல ஆண்டுகள் கழித்து பிறந்த குழந்தைகள்கூட இந்த அணுகுண்டியின் கதிர்வீச்சால் பாதிப்புக்குள்ளானார்கள்.

### முதல் அணுகுண்டு வீச்சு

அமெரிக்கா ஹிரோஷிமா நகர் மீது 1945ஆம் ஆண்டு ஓகஸ்ட் 6 ஆம் திகதிஉலகின் முதல் அணு குண்டை வீசியது. இதில் ஏராளமான பொருள் சேதகங் களும் உயிர் சேதங்களும் ஏற்பட்டன. அணு ஆயுதங்கள் அதிகரித்து வருவது உலக பாதுகாப்பை அச்சுறுத்துவதாக இருக்கிறது. மேலும் உலகத் தலைவர்கள் அனைவரும் அணு ஆயுதங்கள் இல்லாத நாட்டை உருவாக்கம் வேண்டும்.

2 ஆயிரம் மடங்கு பெரியது குண்டு - அமெரிக்க ஜனாதிபதி ஹாரி எஸ் ட்ரூமன் குண்டு வீசப்பட்ட தகவலை அட்லாண்டிக் கடலில் நிறுத்தி வைக்கப்பட்ட போர்க் கப்பல் அகஸ்டாவிலிருந்து அறிவித்தார். இதற்கு முன் உருவாக்கப்பட்ட பெரிய குண்டை விட 2 ஆயிரம் மடங்கு பெரிய குண்டு எனவும் அவர் கூறினார்.

ஹிரோஷிமா மீது வீசப்பட்ட குண்டுக்கு "லிட்டில் பாய்" எனப் பெயர் வைக்கப்பட்டிருந்தது. முன்னாள் ஜனாதிபதி ரூஸ்வெல்ட்டைக் குறிக்கும் வகையில் இந்தப் பெயர் வைக்கப்பட்டிருந்தது. 12-15 ஆயிரம் டன் டிஎன்டி வெடிபொருள் சக்தியை அந்த அணுகுண்டு கொண்டிருந்தது. 13 சதுர கிலோ மீற்றர் பரப்பை அந்த அணுகுண்டு நாசம் செய்தது.

உள்ளூர் நேரப்படி காலை 8.15 மணிக்கு எனோலா கே என்ற அமெரிக்க டீ - 29 விமானத்திலிருந்து இந்த



குண்டு வீசப்பட்டது.

குண்டு விழுந்த இடத்திலிருந்து 500 அடி சுற்றளவில் இருந்த அனைவரும் அப்போதே ஆவியாகினர்.

இந்த குண்டு வீச்சில் 1,18,661 பொது மக்கள் கொல்லப்பட்டதாக அந்த நேரத்தில் ஜப்பான் அறிவித்தது.

ஹிரோஷிமாவில் வசித்த 3,50,000 பேரில் 1,40,000 பேர் கொல்லப்பட்டிருக்கலாம் என அறியப்ப டுகிறது. இந்த குண்டு வீச்சால் ஏற்பட்ட கதிர்வீச்சில் பலர் நீண்ட காலத்துக்கு நோய்வாய்ப்பட்டு இறந்தனர். பலர் உடல் ஊனமடைந்தனர்.

நாகசாகி மீது மீண்டும் குண்டு வீச்சு: இதற்கு மூன்று நாள்களுக்குப் பிறகு, நாகசாகி நகரத்தின் மீது மீண்டும் ஒரு அணுகுண்டு வீசப்பட்டது. இதனால் 74,000 பேர் கொல்லப்பட்டனர்.

### நேச நாடுகளிடம் சரணடைந்த ஜப்பான்

இந்த அணுகுண்டு வீச்சால் ஆசிய உலகப் போர் சட்டென முடிவுக்கு வந்தது. ஆனால், குண்டை வீசு வதற்கு முன்பாகவே ஜப்பான் சரணடையும் நிலையில் இருந்தகாக விமர்சகர்கள் கூறுகின்றனர். இரண்டு அணுகுண்டுகள் வீசப்பட்டதும், 1945 ஓகஸ்ட் 8ஆம் திகதியன்று ஜப்பான் மீது சோவியத் ரஷ்யா போர்ப் பிரகடனம் செய்ததும் ஜப்பானுக்கு வேறு வழியில்லாமல் போனது. அதே மாதம் 14 ஆம் திகதி நேச நாடுகளிடம் சரணடைந்தது ஜப்பான்.

அணு ஆயுதங்கள் அதிகரித்து வருவது உலக பாதுகாப்பை அச்சுறுத்துவதாக இருக்கிறது. மேலும் உலகத் தலைவர்கள் அனைவரும் அணு ஆயுதங்கள் இல்லாத நாட்டை உருவாக்கம் வேண்டும் .




# நேற்று சிந்துஜா நாளை யாரோ?

■ எஸ்.ஆர்.லெம்பேட், மன்னார்

மன்னார் முருங்கன் பிரதேசத்திலுள்ள தம்பனை என்ற கிராமத்துப் பெண் திருமதி சிந்துஜா தனது முதலாவது பிரசவத்தை மன்னார் பொது மாவட் வைத்தியசாலையில் பலத்த போராட்டத்தின் பின்னர் சிசேரியன் சத்திர சிகிச்சை மூலம் குழந்தையைப் பெற்றுக் கொண்டார்.

திருமதி சிந்துஜா பட்டப் படிப்பை மேற்கொண்டு முடிக்கும் தறுவாயில் உள்ள வேளையில் தனது எதிர்கால கனவுகளுடன் தாயாகும் பாக்கியம் பெற்றிருந்தார்.

வைத்தியசாலையிலிருந்து தாயும் குழந்தையும் சுகமாக வெளியேறி தங்களது வீட்டில் தனது தாயாரின் அரவணைப்பில் இருந்த நிலையில் 5 ஆவது நாள் மட்டில் அசாதாரணமாக இரத்தப் போக்கை அவதானித்துள்ளார்.

மாலை நேரம் நெருங்கும் போது, கூடுதலான இரத்தம் வெளியேறத் தொடங்கிய நிலையில், அசிரத்தையாக இருந்ததை உணர்ந்து, தாயாரதும் மற்றும் உறவினர்களதும் வற்புறுத்தலின் முடிவில் 1990 அம்புலன்ஸ்ஸை வரவழைத்து பிரதேச வைத்தியசாலை முருங்கனுக்குக் கொண்டு சென்று, அங்கு காலதாமதமின்றி மன்னார் மாவட்ட வைத்தியசாலைக்கு அவர்களால் அனுப்பி வைக்கப்பட்டார்.

தயார் மிகவும் நம்பிக்கையுடன் மன்னார் மாவட்ட வைத்தியசாலைக்கு இரவு 2 மணி அளவில் கொண்டு சென்று தனது மகளை விடுதி இலக்கம் 06 இல் அனுமதித்தார்.

அங்கு கடமையில் இருந்த தாதிகள் கொண்டுவரப்பட்ட நோயாளியை குளியலறைக்குச் சென்று இரத்தம் தோய்ந்திருந்த உடுப்புக்களை கழுவிவரும்படி பணித்துள்ளனர். அதன் படி கழுவிவிட்டு வந்த நோயாளியை கட்டிலில் படுக்க வைத்துவிட்டு ஏதோ ஒரு கருவியை கையில் பொருத்திவிட்டு தங்களது ஓய்வு அறைக்குச் சென்று விட்டனராம்.

தனது மகளுக்கு ஏதாவது பரிகாரம் நடக்கும், வைத்தியர் வருவார் என ஏக்கத்துடன் இருந்த தாய் பொறுக்கமுடியாது தாதியர்களின் ஓய்வு அறைக்குச் சென்று பார்த்துள்ளார். அங்கு தாதியர்கள் கைத் தொலைபேசியை வைத்து நோண்டிக் கொண்டிருந்ததை அவதானித்தார்.

தயார் பொறுத்துக் கொள்ள முடியாது ‘மகளின் நிலையைப் பாருங்கள்’ என்று அழுத போது, தாதியர்கள் அதட்டலான குரலில்‘கையில் கருவி பொருத்தியுள்ளோம். நாங்கள் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம்’ என்று தாயாரை விரட்டியுள்ளனர்.

‘கையில் பொருத்திய கருவியை கைத் தொலைபேசியில் பார்த்தால் மட்டும் போதுமா? மகளின் உடம்பிலிருந்து வெளியேறும் இரத்தத்தை பார்க்க வேண்டாமா? என்று தாயார் தனக்குத்தானே கூறிக்கொண்டு வந்து, மீண்டும் மகளின் கட்டிலருகில் வந்து கடவுளை வேண்டிக் கொண்டு கையில் மகளின் சிறு குழந்தையையும் வைத்துக் கொண்டு காலை வரையும் இருந்துள்ளார்.

காலை ஏழு மணியளவில் புதிய தாதியர்கள் கடமைக்கு வந்ததும் மீண்டும் தாதியர்களிடம் அணுகி தனது மகளின் பரிதாப நிலையை சொல்லி அழுதுள்ளார்.

நிலைமையை உணர்ந்த புதிய தாதியர்கள் மீண்டும் மகளை பாத்றூம் போய்க் கழுவிவிட்டு வரும்படி கூறியுள்ளார்கள். தாயார் மிகவும் கஷ்டப்பட்டு கைத் தாங்கலாக மகளைக் கூட்டிக்கொண்டு சென்று கழுவி

தொடர்ச்சி▼

# நேற்று சிந்துஜா நாளை யாரோ?

**தொடர்ச்சி▲**

விட்டு மீண்டும் கட்டிலடிக்கு வரும் வழியில் மகள் தலைசுற்றுவதாகக் கூறி திடீரெனக் கீழே விழுந்துவிட்டார்.

இந்த நிலையில் தாயார் போட்ட கூக்குரலில் எல்லோரும் ஓடி வந்து கீழே கிடந்த மகளைத் தூக்கி கட்டிலில் போட்டனர். பின்பு ஏதோ ஏதோவெல்லாம் செய்தார்கள். காலை 7.30 மணியளவில் மூன்று வைத்தியர்கள் அவசர அவசரமாக வந்து மயக்க நிலையில் இருந்த மகளை தள்ளு வண்டிக்கு மாற்றி வைத்து தள்ளுவண்டியைத் தள்ளிக் கொண்டு ஒப்பரேசன் அறைக்குக் கொண்டு சென்றனர்.

தாயார், மகளின் கைக்குழந்தையுடன் காவல் இருந்துள்ளார். 11 மணியளவில் ஒரு வைத்தியர் வந்து தாயாரைப் பார்த்து பெரிய ஐயா கதைக்க வருமாறு கூறுகிறார் என்று அழைத்துச் சென்றுள்ளார்.

அங்கு பெரிய ஐயா, "அம்மா உங்கள் மகளுக்கு நிறைய இரத்தம் போய்விட்டது. இப்போது மூச்சுவிட முடியாது கஷ்டப்படுகிறார். நாங்கள் குழாய் போட்டு சுவாசிக்க வைத்துள்ளோம். இனி அதிதீவிர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப் போகிறோம் என்று தெரிவித்துள்ளார்.

அதற்குத் தாயார் "நாங்கள் நடுச்சாமத்தில் இங்கு கொண்டு வந்தோம். மகள் மயங்கி விழும்வரை ஏன் ஐயா நீங்கள் ஒருத்தரும் வந்து பார்க்கவில்லை" என்று கூறி அழுதுள்ளார்.

அவ்வேளையில், அங்கு வந்த மற்றுமொரு டாக்டர் ஏதோ இங்கிலீஷில் பெரிய டாக்டருடன் கதைத்த முறையை அவதானித்த போது, ஏதோ விபரீதமாக மாறுவதை தான் உணர்ந்ததாக தாயார் கூறுகிறார். அவ்விடத்தை விட்டு உடனே டாக்டர்மார் உள்ளே சென்று விட்டனராம்.

ஏறத்தாழ அரை மணித்தியாலம் கழித்துப் பெரிய டாக்டர் மீண்டும் வந்து தாயிடம், "உங்கள் மகளை போய்ப் பாருங்கள். நாங்கள் என்ன செய்ய முடியும்" என்று தெரிவித்துள்ளார்.

தாயார் மிகவும் ஆத்திரப்பட்டு "அடப்பாவிகளா! எல்லோரும் சேர்ந்து எனது மகளைக் கொன்று விட்டீர்களா? என பத்திரகாளி யாக மாறியது மட்டும்தான் செய்யக் கூடியதாக இருந்ததாம்.

தன் மகளின் உயிர் மீண்டும் வருமா? சிறு கைக்குழந்தை தன் தாயின் பாலைக் குடிக்குமா? அதற்கு என்ன பதில்? பணிப்பாளர் வந்து கூறுகிறார் தாய் இறந்ததற்கு காரணம் தெரியாதாம்.

இது என்ன கதை? எங்களுக்கே தெரியும். இரத்தம் வெளியேறுவதை எப்படி நிற்பாட்டுவது என்று தெரிந்தால் நாங்கள் ஏன் இங்கு கொண்டு வரவேண்டும்? இரத்தம் போவதை நிப்பாட்ட அதைக் கண்டுபிடிக்க பிண பரிசோதனை செய்து தான் கண்டுபிடிக்க வேண்டும் என்றால் வைத்தியசாலையை சுடலையாக மாற்றுங்கள்.

பிண பரிசோதனை செய்பவர் உடல் பாகங்களை வெட்டியெடுத்து கொழும்புக்கு அனுப்புவார். அதற்கான பதில்கள் கொழும்பிலிருந்து கடைசி வரை வராது. வரும், வரும் என்று கடைசி வரை கூறி எங்களை இப்படி ஏமாற்றிக் கொண்டிருக்க, அலுத்துப்போய் நாங்களாகவே விலகிச் செல்வதற்கு செய்யும் தந்திர வேலைகள் தான் என அறியாமல் போவதற்கு மன்னார் காட்டில் வாழும் நரிக் கூட்டமோ அல்லது கழுதைக் கூட்டமோ அல்ல நாங்கள்.

இவ்விடயம் தொடர்பாக பல்வேறுபட்டவர்களிடம் ஆலோசனை நடத்தியிருந்தோம். அதன் தொகுப்பை இங்கே முன்வைக்கிறோம்.

வைத்தியசாலையிலிருந்து பிரசவத்தின் பின் தாய் வீடு திரும்பியிருந்தால் உடனடியாகவும் மேலும், ஐந்து தடவைகள் அடுத்து வரும் பத்து நாள்களுக்குள் பிரதேச குடும்பநலமாது கள விஜயம் செய்து தாயினதும், சிசுவினதும் சுகாதார நிலைமைகளை அவதானித்து அப்பகுதிக்குரிய சுகாதார வைத்திய அதிகாரிக்கு அறிக்கையிடல் வேண்டும் என கடமை அறிவுறுத்தல் பட்டியல் உள்ளது என்று சொல்லப்படுகிறது. இது நடை முறைப்படுத்தப்பட்டதா?

இரண்டாவதாக, சிசேரியன் சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட தாய் இரத்தப் பெருக்கு ஏற்பட்டு வைத்தியசாலை விடுதியில் அனுமதிக்கப்பட்டார். விடுதியில் அனுமதிக்கப்படும் நோயாளரை உடனடியாக கவனித்து அது பற்றி கடமை வைத்தியருக்கு அறிவிக்க வேண்டிய கடமைப் பொறுப்பைத் தாதியர்கள் மேற்கொண்டனரா? எந்த நிலையில் நோயாளர் வருகை தந்தாலும் உடனடியாக அவ்வேளையில் பொறுப்பிலுள்ள வைத்தியருக்கு அறிவிக்க வேண்டும்.

மூன்றாவது, புதிதாக விடுதிகளுக்கு அனுமதிக் கப்படும் நோயாளர்களை 15 நிமிடங்களுக்குள் வைத்தியர் பார்வையிடல் வேண்டும் என்ற கடமைப் பட்டியல் உள்ள போதும், ஏன் வைத்தியர் இரவு 2 மணிக்கு வந்து நோயளரைப் பார்வையிடாது காலை 7.30 மணிக்கு வந்தார்?

விடுதி 06 இற்கு உரிய இரவுக் கிழமைக்குரிய வைத்தியர் அன்றைய தினம் கடமைக்கு வந்திருந்தாரா? அவர் இரவு வைத்தியசாலையில் தங்கி இருந்தாரா?

சிசேரியன் சத்திரசிகிச்சை க்குட்பட்ட நோயாளி இரத்தப் பெருக்கு காரணமாக விடுதிக்கு வந்த போது, தாதியர்கள் நடந்து கொண்ட கடமைப்பொறுப்பு நடவடிக்கைகள் ஏற்புடையதா?

இந்த இளம் குடும்பப் பெண் வைத்தியசாலையில் வைத்து மனிதப் படுகொலை கு உட்படுத்தப்பட்டதற்கு சமூகம் எடுக்கும் நடவடிக்கைகள்தான் என்ன?

இச்சம்பவத்தில் வைத்தியசாலை சமூகம் நடந்து கொண்டுள்ள முறைமை வைத்தியசாலை முறைமைக்கு உட்பட்டதா? இதுதான் இலங்கை மாவட்ட வைத்திய சாலைகளின் சாதாரண நடை முறைகளா? இவை பொது மக்களுக்குத் தெரியாதா? நோயாளிகளுடனான தொடர் பாடல்களில் அரச வைத்தியசாலைகளின் பொதுவான நடை முறைகள் என்ன?

சாதாரண பொதுமக்கள் தொடக்கம் மதப் பெரி யார்களே!, கற்றோரே!, இளம் குடும்பத் தலைவர்களே!, எதிர்காலத்தில் தாயாகக் காத்திருக்கும் இளம் பெண்களே! நீங்கள் என்ன நிலைப்பாட்டில் இருக் கிறீர்கள்? நேற்று சிந்துஜா. நாளை யாரோ?

# ஆலையடிவேம்பு சுகாதார அலுவலகத்தின் செயற்பாடுகளைப் பாராட்டிய பணிப்பாளர்!

(அஸ்ஹர் இப்றாஹிம்)



குறைவான வளங்களைக் கொண்டு திறமையாக பணி செய்துவரும் ஆலையடிவேம்பு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் செயற்பாடுகள் பாராட்டத்தக்கவை என்று கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சகீலா இஸ்ஸடீன் தெரிவித்தார்.

ஆலையடிவேம்பு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு மின்பிறப்பாக்கி மற்றும் ஒரு தொகுதி தளபாடங்களை கையளிக்கும் நிகழ்வு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி ஏ.அகிலன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

கல்முனை பிராந்தியத்தில் உள்ள சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் ஆலையடிவேம்பு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலத்தின் செயற்பாடுகள் பாராட்டத்தக்கவை. சுகாதார வைத்திய அதிகாரியதும், அங்கு பணியாற்றுகின்ற உத்தியோகத்தர்கள், ஊழியர்களதும் கடின உழைப்பே அதற்குப் பிரதான காரணமாகும். குறித்த அலுவலகத்துக்கு எதிராக இதுவரை எந்தவொரு முறைப்பாடுகளும் கிடைக்கவில்லை.

அந்தவகையில் சுகாதார வைத்திய அதிகாரி திருமதி அகிலன் உள்ளிட்ட அந்த அலுவலகத்தின் உத்தியோகத்தர்கள், ஊழியர்களை பாராட்டுகின்றேன். இந்த அலுவலகத்தில் 5 எஸ் முறைமையை நடைமுறைப்படுத்தி இதன் சேவைத் தரத்தை மேலும் கூட்ட வேண்டும்.

கடந்த காலங்களில் இந்த சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் சுகவனிதையர்களுக்கான சேவை வழங்குதலில் சிறப்பு விருதுகளையும் பெற்றுக் கொண்டது. அதனை தக்க வைத்துக் கொள்வது இங்குள்ளவர்களின் பொறுப்பாகும்.

உங்களுடைய தேவைகள் குறைபாடுகளை தெரியப்படுத்துமிடத்து அவற்றினை முடியுமானளவு நிவர்த்தி செய்வோம். எதிர்வரும் ஆண்டில் இந்த அலுவலகத்துக்கு அதிகமான நிதிகளை ஒதுக்கி அபிவிருத்தி செய்வதற்கும் திட்டமிட்டுள்ளோம்.– என்றார்.

பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சீ.எம்.மாஹிர், உயிரியில் மருத்துவ பொறியியலாளர் எம்.என்.இப்ஹாம், கணக்காளர் திருமதி உசைனா பாரிஸ் உள்ளிட்ட பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.





# மாணவர்களின் உளவள ஆற்றுகையை மேம்படுத்த ஆசிரியர்களுக்கு செயலமர்வு!

( வி.ரி. சகாதேவராஜா)

மட்டு. மேற்குவலய மாணவர்களின் உளவள ஆற்றுகையை மேம்படுத்தும் செயற்றிட்டத்தின் கீழ் ஆசிரியர்களுக்கு பயிற்சியளிக்கும் செயலமர்வு நேற்று முன்தினம் மட்டக்களப்பில் நடைபெற்றது.

யாழ். மருத்துவபீட வெளிநாட்டு பழைய மாணவர் சங்கத்தின் நிதி அனுசரணையில், மட்டக்களப்பு மாவட்ட உளநல பிரிவினரது ஒருங்கிணைப்பில், பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கேட்போர் கூடத்தில் பணிப்பாளர் டாக்டர் இரா.முரளீஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலய பாடசாலைகளில் உளவள ஆற்றுகை படுத்துத்தும் பணியை மேற்கொள்ளும் ஆசிரியர்களை பயிற்சியளிக்கும் முகாமாக ஒழுங்கு செய்யப்படிருந்த இந்தப் பயிற்சி பட்டறைக்கு, மட்டக்களப்பு மாவட்ட உளநல ஒருங்கிணைப்பாளர் டாக்டர் டான் சவுந்தராஜா, வவுணதீவு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர். எஸ். ஏ. ஜோதிலட்சுமி, உளநல சமூக சேவையாளர் என்.நித்தியானந்தன் ஆகியோர் வளவாளராகக் கலந்து கொண்டனர். மட்டக்களப்பு மேற்கு கல்வி வலய திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் வை. சஜீவன் இதில் கருத்துரை வழங்கியிருந்தார் .





# அளவெட்டி வடக்கு

# தவளக்கிரி முத்துமாரி அம்மன் கோயில்

## குரோதி வருஷ 4ம் ஆடிச் செவ்வாய் உற்சவமும்

## (1008) நவோத்தர சகஸ்ரசங்காபிஷேகமும்

## 2024

அம்பாள் துதி

திருச்சிற்றம்பலம்

நத்தம் செறி அளவை நந்தவன மாகிரிவாழ்,
முத்துமாரித்தாயே முன்னிற்பாய் நித்தமும் எம்மை
சேய் போல் வளர்த்து செங்கரத்தால் அணைக்கும்
தாயே நின் பொற் பாதம் சரண்

திருச்சிற்றம்பலம்

விநாயகர் துதி

திகட சக்கரச் செம்முக மைந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர வின்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்!

முருகன் துதி

வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேள் திருக்கைவேல் வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்பும் குன்றும்
துளைத்தவேல் உண்டே துணை.

நிகழும் குரோதி வருடம் ஆடித் திங்கள் 28ம் நாள் (13.08.2024) நான்காவது ஆடிச் செவ்வாய் உற்சவத்தினை முன்னிட்டு அண்டமெலாம் பூத்தவளாகிய எங்கள் அபிராமவல்லி முத்துமாரி அம்பிகைக்கு மாலை 1.00 மணிக்கு (1008) நவோத்திர சகஸ்ரசங்காபிஷேகமும் மாலை 6.00 மணிக்கு வசந்த மண்டபப்பூஜையும் இடம் பெற்று நாத கீத கானம் முழங்க மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட திருமஞ்சத்தில் ஸ்ரீ விநாயகப் பெருமான். ஸ்ரீ முருகப் பெருமான் சகிதம் அருள்மிகு முத்துமாரி அம்பாள் எழுந்தருளி அடியார்களுக்கு அருள் பாலிக்கும் வண்ணம் வீதியுலாவரும் அற்புதக் காட்சி இடம் பெறும். இப்புனித நிகழ்வில் கலந்து அம்பிகையின் அருள் ஆசியைப் பெற்றுக் கொள்ளும் வண்ணம் வேண்டுகின்றோம்.

**குறிப்பு :- ஈழத்தின் தலைசிறந்த தவில் நாதஸ்வரக் கச்சேரிகளும் இடம் பெறும்**

அளவையூர் லயஞான குபேர பூபதி
தட்சணாமூர்த்தி அவர்களின் புதல்வன்
உதயசங்கர்
M.சுதாகர்
N.பிரசன்னா
J.துசியந்தன்
B.சங்கர்(வருணை)
P.விபூர்ணன்
R.சிவகரன்
P.சச்சின்

இன்குழல் வேந்தன் சுகந்திரன்
R.ஞானசம்பந்தன்
K.இரத்தினகுமார்(மாக்கையா)
KN.மதுசூதனன்
V.சித்தார்த்தன்
V.பிரதீபன்
V.ஆப்ரூபன்
P.அபிலாஸ்

விசேட சாத்துப்படி
ப.யசோகரன்
(மல்லாகம்)

மங்கள வாத்தியம்
ரஜீவன் குழுவினர்
(அளவெட்டி)

ஒலி அமைப்பு
மகிந்தன் சவுண்ஸ்
(அளவெட்டி)

ஒளி அமைப்பு
நியூட்டன் (தச்சன்தோப்பு)
மகிந்தன் (அளவெட்டி)

தவளக்கிரி முத்துமாரி அம்மன் கோவில்
அளவெட்டி.

இங்ஙனம்
4ம் ஆடிச்செவ்வாய் உபயகாரர்கள்

சந்நிதியான் பிறிண்டேர்ஸ் 0773605009



# சுவாமி விபுலாநந்த அடிகளாரின் துறவற தின நூற்றாண்டு விழா!

(வி.ரி.சகாதேவராஜா)

கல்முனை இராம கிருஷ்ணமிஷன் மகா வித்தியாலயத்தில் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் துறவற தின நூற்றாண்டு விழாத் தொடர் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ய. அநிருத்தனின் வழிகாட்டலின் கீழ் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களமும், காரைதீவு சுவாமி விபுலாநந்த ஞாபகார்த்த பணிமன்றமும் இணைந்து நடத்திய அடிகளாரின் துறவற தின நூற்றாண்டு விழா பாடசாலையின் அதிபர் திருமதி விஜயசாந்தி நந்தபாலா தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கல்முனை வலயக் கல்விப் பணிமனையின் இந்து சமய பாடத்துக்கான ஆசிரிய ஆலோசகர் ம.லக்குணம், தொழில் வழிகாட்டல் ஆசிரிய ஆலோசகர் எஸ். சிவசுந்தமூர்த்தி மற்றும் கல்முனை வடக்கு பிரதேச செயலக இந்து கலாசார உத்தியோகத்தர் திருமதி நா. ஸ்ரீ பிரியா, சைவப் புலவர், வளவாளர் ஜோ.கஜேந்திரா, வளவாளர் நா.சனாதனன், சொற்பொழிவாளர் ஒன்றியத்தின் நிர்வாக உறுப்பினர்களான கு.கிலஷன், கோ திருநாகரன், பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

பாடசாலைகளுக்கான சுவாமியின் திருவுருவப் படங்களை சமயப்பற்றாளர் எஸ். மகேந்திரன் சுவாமி விபுலாநந்த ஞாபகார்த்த பணிமன்றத்துக்கு வழங்கி வைத்தார் . இதனைப் பாடசாலைகளுக்கு மன்ற உறுப்பினர்கள் திணைக்களத்துடன் இணைந்து வழங்கினர்.

ஏற்பாடுகளை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் சார்பில் மாவட்ட செயலக இந்து கலாசார உத்தியோகத்தர் கு. ஜெயராஜ் மேற்கொண்டார்.









# அக்கராயன் விநாயகர் சம்பியன் கிண்ணம் உருத்திரபுரம் விளையாட்டுக்கழக வசமானது

(அஸ்ஹர் இப்றாஹிம்.)

கிளிநொச்சி கால்பந்தாட்ட சங்கத்தின் அனுமதியுடன் அக்கராயன் விநாயகர் விளையாட்டுக்கழகம் நடத்திய அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியில் கனகபுரம் விளையாட்டுக்கழகத்தை 4 : 0 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து உருத்திபுரம் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

உருத்திபுரம் விளையாட்டுக்கழகம் சந்திரோதையா விளையாட்டுக் கழகத்தை 2:0 என்ற கோல் கணக்கிலும் பரந்தன் மத்தி விளையாட்டு கழகத்தை 3:0 என்ற கோல் கணக்கிலும் வென்றது. அரையிறுதிப் போட்டியில் இளைஞர் வட்டம் விளையாட்டுக்கழகத்தை 11:02 என்ற கோல் கணக்கிலும் இறுதிப் போட்டியில் கனகபுரம் விளையாட்டுக் கழகத்தை 4:0 என்ற கோல் கணக்கிலும் வெற்றி கொண்டு சம்பியன் கிண்ணத்ததைத் தனதாக்கிக் கொண்டது.



இந்தச் சுற்றுப் போட்டியின் ஆட்ட நாயகனாக உருத்திபுரம் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த தனுசும், சிறந்த கோல் காப்பாளராக உருத்திபுரம் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த கோகுல் ராஜும் தெரிவு செய்யப்பட்டனர்.

# இந்தியாவின் அறிவியல் முகாமில் பங்கேற்றுள்ள கல்முனை மாணவி

(எம்.எம்.ஜெஸ்மின், அஸ்ஹர் இப்றாஹிம்)

இந்தியாவின் கொச்சி நகரில் இடம் பெற்ற புகழ்பெற்ற மகளிர் அறிவியல் நிகழ்வில் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த ஒரேயொரு மாணவியாக கல்முனை மஹ்மூத் மகளிர் தேசிய கல்லூரி உயர்தர பௌதீக விஞ்ஞான மாணவி பத்திஹா ஹக்கீம் கலந்து கொண்டுள்ளார்.

இலங்கையில் உள்ள அமெரிக்க தூதரகத்தால் வழங்கப்பட்ட இந்த வாய்ப்பு, பௌதீக அறிவியலுக்கான அவரது அர்ப்பணிப்பை காட்டும் ஓர் சாதனை என்பது குறிப்பிடத்தக்கது.





# மட்டக்களப்பு விமோச்சனா இல்ல ஒழுங்குபடுத்தல் கலந்துரையாடல்!

(பழுவூரான்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் மது மற்றும் போதைப் பொருள் பாவனையின் தாக்கமும் அதன் தீர்வு பற்றியும் மாவட்ட மட்டத்திலான பரிந்துரைவாத கலந்துரையாடல் யு.எஸ். எய்ட் மற்றும் ஸ்கோர் நிறுவனங்களின் அனுசரணையில் இடம்பெற்றது.

குளோபல் நிலையம் மற்றும் விமோசனா ஏற்பாட்டில் மட்டக்களப்பு தனியார் விடுதியில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி சுதர்சினி ஸ்ரீகாந்த், வவுணதீவு பிரதேச செயலாளர் திருமதி சத்தியானந்தி நமசிவாயம், கிராம சேவகர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், சமுதாயம்சார் சீர்திருத்த உத்தியோகத்தர்கள், அரச சார்பற்ற நிறுவனத்தின் தலைவர்கள், சமயத் தலைவர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டனர்.

இதன் போது வளவாளராக கலந்து கொண்ட சட்டத்தரணி ஐங்கரன் குகதாசன், தேசிய மட்டத்திலும் மட்டக்களப்பு மாவட்ட மட்டத்திலும் மது மற்றும் போதை பொருள் பாவனையின் தாக்கம் பற்றியும் போதைப் பொருளில் தங்கி வாழுகின்ற நிலைமையில் உள்ளவர்களை குற்றவாளிகளாகவோ, நோயாளிகளாகவோ அணுகாமல், அவர்கள் போதைப்பொருள் பாவனையில் இருந்து விடுபடுவதற்கான கலாசார, சமூகப் பின்னணிக்கு இசைவான, பொருத்தமான புனர்வாழ்வுச் செயல் முறைகளை அளிப்பதன் முக்கியத்துவம் தொடர்பில் தெரிவித்தார்.

இந்தச் செயல்முறையில் விமோச்சனா இல்லத்தின் பங்களிப்பு சமூகத்தின் மீது ஏற்படுத்தியுள்ள நேர்மறையான தாக்கங்கள், பயனாளிகளின் வாழ்க்கைப் பயணத்தின் ஊடாகப் பகிரப்பட்டது.









# சித்தானைக்குட்டி சுவாமியின் 73 ஆவது குருபூஜை நேற்று!

(வி.ரி.சகாதேவராஜா)

சித்தருள்சித்தர் ஸ்ரீ சித்தானைக்குட்டி சுவாமியின் 73 ஆவது குருபூஜையும், அன்னதானமும் காரைதீவு ஸ்ரீ சித்தானைக்குட்டி ஆலயத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை (11) நடைபெற்றது.

காலை முதல் பஜனை கூட்டுப் பிரார்த்தனை இடம்பெற்றன. தொடர்ந்து ஆலய குரு சிவஸ்ரீ தியாகராஜ குருக்கள் குருபூஜையை நடத்தினார். ஆயிரக் கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு வழிபட்டனர்.

ஆலய பரிபாலன சபை தலைவர் சி.நந்தேஸ்வரன் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது.




## தமிழகத்தில் 4 புதிய மாநகராட்சிகள்

# இன்று உதயம்!



திருவண்ணாமலை, நாமக்கல், புதுக்கோட்டை, காரைக்குடி என நான்கு புதிய மாநகராட்சிகளை தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று ஆரம்பித்து வைத்தார்

மக்கள் தொகை அடிப்படையில் பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சி என தரம் உயர்த்தப்படும். அன்படி தமிழகத்தில் தற்போது நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் 21 மாநகராட்சிகள், 138 நகராட்சிகள், 490 பேரூராட்சிகள் உள்ளன.

இந்நிலையில், புதுக்கோட்டை, திருவண்ணாமலை, நாமக்கல், காரைக்குடி ஆகிய நகராட்சிகளை மாநகராட்சிகளாக தரம் உயர்த்த வேண்டும் என்று அரசுக்கு பல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

அதன்படி புதுக்கோட்டை நகராட்சி மற்றும் 11 ஊராட்சிகளை ஒன்றிணைத்து புதுக்கோட்டை மாநகராட்சியும், திருவண்ணாமலை நகராட்சி மற்றும் 18 ஊராட்சிகள், அடி அண்ணாமலையில் உள்ள பகுதிகளை ஒன்றிணைத்து திருவண்ணாமலை மாநகராட்சியும், நாமக்கல் நகராட்சி மற்றும் 12 ஊராட்சிகளை இணைத்து நாமக்கல் மாநகராட்சியும், காரைக்குடி நகராட்சி மற்றும் 2 பேரூராட்சிகள், 5 ஊராட்சிகளை இணைத்து காரைக்குடி மாநகராட்சியும் உருவாக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், இந்த 4 புதிய மாநகராட்சிகளையும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமைச் செயலகத்திலிருந்தவண்ணம் காணொலி வாயிலாக இன்று தொடங்கி வைத்தார். இதன்மூலம் தமிழகத்தில் மாநகராட்சிகளின் எண்ணிக்கை 25 ஆக அதிகரித்துள்ளது.

## பாரம்பரிய முறையில் மயில் குழம்பு செய்வது எப்படி?

# யூடியூப்பில் வீடியோ வெளியிட்டவர் கைது

பாரம்பரிய மயில் குழம்பு செய்வது குறித்து வீடியோ வெளியிட்ட யூடியூபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தெலுங்கானா மாநிலம், சிரிசில்லா பகுதியைச் சேர்ந்தவர் கோடம் பிரனய் குமார். இவர் தனது யூடியூப் தளத்தில் சமையல் வீடியோக்களை தொடர்ந்து பகிர்ந்து வருகிறார்.

இந்நிலையில், சமீபத்தில், “பாரம்பரிய முறையில் மயில் குழம்பு செய்வது எப்படி..?” என்ற தலைப்பில் வீடியோ ஒன்றை யூடியூபில் வெளியிட்டார். இந்த காணொலி சமூக வலைதளங்களில் வைரலான நிலையில், பிரனய் குமாரின் வீட்டைச் சோதனையிட்ட பொலிஸார் மற்றும் வனத்துறையினர் அவரை வனவிலங்கு பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர்.



பிரனய் குமார் சமையலுக்கு பயன்படுத்திய இடத்தை ஆய்வு மேற்கொண்ட பொலிஸார், அவரின் இரத்த மாதிரிகளை பரிசோதனைக்கு அனுப்பியுள்ளனர்.

பாதுகாக்கப்பட்ட பட்டியலில் உள்ள தேசிய பறவையான மயிலை சாப்பிட்டது உறுதிசெய்யப்பட்டால், வனவிலங்கு பாதுகாப்பு சட்டத்தின்படி, அவருக்கு 7 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை வழங்க வாய்ப்புள்ளது. மேலும், பிரனய் குமாரின் யூடியூப் தளத்தில் இருந்து மயில் குழம்பு தொடர்பான காணொலியையும் பொலிஸார் நீக்கியுள்ளனர்.



## பற்றி எரிந்தது உக்ரைனின் அணுமின் நிலையம்

# தீ வைத்தது நீதான்; இரு தரப்பும் பரஸ்பர குற்றச்சாட்டு





ரஷ்யாவுக்குள் உக்ரைன் இராணுவம் புகுந்து தாக்குதல் நடத்தி வரும் நிலையில், ரஷ்ய இராணுவத்தினர் கைப்பற்றி இருந்த உக்ரைனின் ஜபோரிஜியா (Zaporizhzhia Nuclear Power Plant) அணுமின் நிலையம் தீ வைக்கப்பட்டு பற்றி எரிகின்றது.

இந்தத் தீ வைப்புக்குக் காரணமாக இரு நாடுகளும் பரஸ்பரம் மாற்ற நாட்டைக் குற்றஞ்சாட்டியுள்ளன.

உக்ரையன் – ரஷ்யப் போரை நிறுத்த பேச்சுகளில் ஈடுபடும் படி உலகநாடுகள் பலவும் வலியுறுத்திவருகின்றன. ஆனால் போர் முடிவுக்கு வந்தபாடில்லை. அதற்கு மாறாக அவ்வப்போது இரு நாடுகளும் தீவிர தாக்குதலில் ஈடுபடுகின்றன.

இந்நிலையில் முதன் முறையாக உக்ரைன் படைகள் நேற்று ரஷ்யாவுக்குள் நுழைந்தன. அங்குள்ள கூர்க்ஸ் பிராந்தியத்தில் உக்ரைன் படைகள் சரமாரி தாக்குதல் நடத்தி வருகின்றன. இதனால் அங்கு அவசர நிலை அறிவிக்கப்பட்டு, பாதுகாப்பு நடவடிக்கையாக 76 ஆயிரம் பேர் அங்கிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.

அதேவேளை, கூர்க்ஸ் பிராந்தியத்தில் உக்ரைன் படைகள் முன்னேறுவதைத் தடுக்க ரஷ்யா தனது இராணுவத்தைக் குவித்து வருகிறது.

இந்தநிலையில் உக்ரைன் படைகள் ரஷ்யாவுக்குள் நுழைந்து தாக்குதல் நடத்துவது குறித்து கருத்துத் தெரிவித்த உக்ரைன் அதிபர் விளாடிமிர் ஜெலன்ஸ்கி, “ரஷ்யாவுக்கு எதிரான போரில் இது மிகப்பெரிய வெற்றி” என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை, உக்ரைனின் இந்த நடவடிக்கை மேலும் பதற்றத்தை அதிகரிக்கும் என ரஷ்ய அதிபர் புடின் எச்சரித்துள்ளார்.

இந்நிலையில், ரஷ்ய இராணுவத்தினர் கைப்பற்றி இருந்த ஐரோப்பாவின் மிகப்பெரியம் உக்ரைனின் ஜபோரிஜியா (Zaporizhzhia Nuclear Power Plant) அணுமின் நிலையத்தை அழிக்கத் திட்டமிட்டு, ரஷ்யப் படையினர் அதற்கு தீ வைத்துள்ளனர். இதனால் கரும்புகை எழுந்து அணுவீச்சு தாக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இது போன்ற தாக்குதலை ரஷ்யா தவிர்க்க வேண்டும் என உக்ரைன் அரசு சார்பில் கோரிக்கை வைக்கப்பட்ட நிலையில், இந்தச் சம்பவத்திற்கு உக்ரைன் தான் காரணம் என்று ரஷ்யாவும் குற்றஞ்சாட்டியுள்ளது. இதனால் ரஷியா–உக்ரைன் போரில் பதற்றம் தீவிரம் அடைந்துள்ளது.

பக்கங்கள் - 7

# கனடா முரசு

திங்கட்கிழமை 12/08/2024

## 200 கி.மீ. வேகத்தில் சென்றவர் சிக்கினார்

ஒன்டாரியோ மாகாணத்தில் சனிக்கிழமை இரவு ஒட்டாவாவில் நெடுஞ்சாலை 417 இல் மணிக்கு 200 கி.மீ. வேகத்தில் காரைச் செலுத்திய 19 வயது சாரதி ஒருவர் C2▶

# வங்கதேச இந்துக்களுக்காக கனடாவிலும் போராட்டங்கள்




வங்கதேசத்தில் இந்துக்களுக்கு எதிரான வன்முறையை கண்டித்து கனடாவில் போராட்டங்கள் வெடித்துள்ளன.

வங்கதேசத்தில் இந்துக்கள் மற்றும் பிற சிறுபான்மையினருக்கு எதிரான வன்முறை தொடர்கிறது.

இந்த வன்முறைக்கு எதிராக கனடாவில் நேற்று ஞாயிற்றுக்கிழமை (ஒகஸ்ட் 11) ஆயிரக்கணக்கான இந்துக்கள் வீதிகளில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். C2▶




## தற்காலிக வெளிநாட்டு தொழிலாளர் திட்டம்; திருத்தியமைப்பதற்கு கனடா அரசு தீர்மானம்



கானடாவின் தற்காலிக வெளிநாட்டு தொழிலாளர் திட்டத்தில் புதிய சீர்திருத்தங்களை அரசாங்கம் அறிவித்துள்ளது.

கனடாவில் விவசாயம், மீன் மற்றும் கடல் உணவு பதப்படுத்தப்படும் துறைகளில் தொழிலாளர் பற்றாக்குறையை சரி செய்ய புதிய தொழிலாளர் நெறிமுறையை கனேடிய அரசாங்கம் உருவாக்கவுள்ளது. C2▶




### வங்கதேச இந்துக்களுக்காக...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த போராட்டங்களில் இந்துக்கள் மட்டுமின்றி கிறிஸ்தவ மற்றும் யூத சமூகத்தினரும் பங்கேற்றனர்.

கனடாவின் டொராண்டோ நகரில் நடந்த ஆர்ப்பாட்டத்தின் போது, இந்துக்களைப் பாதுகாக்க பங்களாதேஷ் இடைக்கால அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்குமாறு கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவிடம் மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

பங்களாதேஷில் இந்துக்களுக்கு நடந்த வன்முறையைக் கண்டித்து அமெரிக்காவில் நியூயார்க்கிலும், இங்கிலாந்தில் லண்டனிலும் கூட நேற்று முன்தினம் ஓகஸ்ட் 10 சனிக்கிழமையன்று ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

இந்துக்கள் மீதான தாக்குதலுக்கு எதிர்ப்பு தெரிவித்து இங்கிலாந்து நாடாளுமன்ற வளாகம் முன்பு ஏராளமானோர் திரண்டனர்.

"இந்துக்களின் உயிர் முக்கியம்" என்ற கோஷங்களை எழுப்பினர். இந்த ஆர்ப்பாட்டத்தில் மனித உரிமை அமைப்புக்களின் உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இது தவிர, ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகம் முன்பு சனிக்கிழமை பலர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.




### தற்காலிக...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இது, கானடாவின் தற்காலிக வெளிநாட்டு தொழிலாளர் திட்டத்தில் நிகழும் மோசடி மற்றும் தவறான பயன்பாட்டை தடுக்க வழிவகுக்கும் எனவும் கூறப்படுகிறது.

இதன் மூலம், இந்த துறைகளில் நேர்மையை மேம்படுத்தி, உள்ளூர் மற்றும் வெளிநாட்டு தொழிலாளர்களின் உரிமைகள் பாதுகாக்கப் படும்.

மேலும், தொழிலாளர்கள் குறைவான ஊதியத்தில் 20 வீதத்தைத் தாண்டக் கூடாது என்ற விதியை கடுமையாக பின்பற்றவும், கட்டணங்களை உயர்த்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும், வேலை தரும் முதலாளிகளின் தகுதிகள் தீவிரமாக பரிசீலிக்கப்படவுள்ளன.

தற்காலிக வெளிநாட்டு தொழிலாளர் திட்டம், கனடாவில் உள்ள பணியிடங்களை நிரப்ப வெளிநாட்டிலிருந்து தொழிலாளர்களை தற்காலிகமாக நியமிப்பதற்கான வழிமுறையாகும்.

### 200 கி.மீ...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதற்கான குற்றச்சாட்டை எதிர் கொள்கிறார்.

ஒன்டாரியோ மாகாண காவல்துறையின் தகவலின்படி, மூடி டிரைவினால் கிழக்கு நோக்கி செல்லும் நெடுஞ்சாலையில் மணிக்கு 196 கிமீ வேகத்தில் சென்ற சமயம் சாரதி நிறுத்தப்பட்டார்.

சாரதி 30 நாள் ஓட்டுநர் உரிமம் இடைநிறுத்தம் மற்றும் 14 நாள் வாகனம் பறிமுதல் ஆகியவற்றை எதிர் கொள்கிறார்.

குற்றம் நிரூபிக்கப்பட்டால், ஓட்டுநருக்கு இரண்டாயிரம் டொலர் அபராதம், ஆறு குறைபாடு புள்ளிகள் மற்றும் ஒரு வருடம் வாகனம் ஓட்ட தடை விதிக்கப்படும்.




# கனடாவில் விமான விபத்தில் விஞ்ஞானி பலி; இருவர் காயம்

கனடாவில் இடம்பெற்ற விமான விபத்தில் சமுத்திரவியல் விஞ்ஞானி ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

கனடாவின் நியூபவுண்ட்லான்ட்டில் கோர்னர் புருக் பகுதியில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

செஸ்னா 337எச் ஸ்கைமாஸ்டர் விமானம் கடந்த வெள்ளியன்று முற்பகல் கார்னர் புரூக்கைச் சுற்றியுள்ள மலைப்பகுதியில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

மீன்பிடித் திணைக்கள பணியாளர்கள் மூவரும் விமானியும் பயணம் செய்த விமானமொன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது. நீர்ப் பிராணிகளைக் கண்காணிக்கும் பயணத்தின் போதே இந்த விமான விபத்து இடம்பெற்றதாகக் கூறப்படுகின்றது.

விமானத்தில் பயணம் செய்த விஞ்ஞானி ஒருவர் உயிரிழந்துள்ளார். மற்றிருவர் காயமடைந்தனர்.

# வெறுப்புணர்வைத் தூண்டித் தாக்கியவரை ரொறொன்ரோ பொலிஸார் தேடுகின்றனர்

ரொறொன்ரோவின் கடற்கரைக்கு அருகில் உள்ள உணவகம் ஒன்றில் வெறுப்புணர்வை தூண்டித் தாக்குதல் நடத்தினார் எனச் சந்தேகிக்கப்படும் ஒரு நபரை அடையாளம் காண டொராண்டோ பொலிஸார் முயற்சித்து வருகின்றனர்.

குயின் ஸ்ட்ரீட் ஈஸ்ட் மற்றும் வூட்பைன் அவென்யூவின் கிழக்கே உள்ள மேக்லீன் அவென்யூவிற்கு அருகிலுள்ள உணவகத்தில் இந்தச் சம்பவம் ஓகஸ்ட் 8 அன்று இரவு 7 மணிக்கு சற்று முன்னர் நடந்தது.

பொலிஸாரின் கூற்றுப்படி, சந்தேக நபர் பாதிக்கப்பட்ட பெண்ணுடன் வாய்த் தகராறில் ஈடுபட்டமையுடன் அவர்களை இன அவதூறு செய்துள்ளார்.

சந்தேக நபர் அந்தப் பகுதியை விட்டு தப்பிச் செல்வதற்கு முன்னர் பாதிக்கப்பட்டவரை "ஒரு பொருளால்" தாக்கியுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் சுமார் 60 வயதுடையவர் என்றும், ஐந்து அடி ஏழு உயரத்தில் மெல்லிய உடலமைப்புடன் இருந்தார் எனவும் விவரிக்கப்பட்டுள்ளது. அவர் கடைசியாக நீல நிற ஸ்வெட்டர், காக்கி ஷோர்ட்ஸ், பேஸ்பால் தொப்பி மற்றும் வெள்ளை ஓடும் காலணிகள் அணிந்திருந்தார். அவர் ஒரு கருப்பு வாளி மற்றும் ஒரு கருப்பு ஷொப்பிங் தள்ளுவண்டியை எடுத்துச் சென்றார்.



பொலிஸார் சந்தேக நபரின் படத்தையும் வெளியிட்டுள்ளனர். மேலும் இந்தச் சம்பவத்தை சந்தேகத்திற்குரிய வெறுப்பு தூண்டப்பட்ட குற்றமாக கருதுவதாகவும் அவர்கள் கூறினர்.

யாரேனும் தகவல் தெரிந்தால், காவல்துறையைத் தொடர்புகொள்ளும்படி அல்லது குற்றத்தைத் தடுப்பவர்களை அநாமதேயமாக அழைக்கும்படி புலனாய்வாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

# நயாகரா ஹோட்டல் அறையில் குண்டு வைத்தார் என்று பீதியைக் கிளப்பியவரை மடக்கிப் பிடித்து விசாரணை!







கனடாவின் நயாகரா நீர்வீழ்ச்சி பகுதியில் ஹோட்டல் ஒன்றில் குண்டு வைத்ததார் என்று கூறிய நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

57 வயதான நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். தாம் தங்கியிருந்த ஹோட்டல் அறையில் குண்டு வைத்துள்ளார் என இந்த நபர், ஏனைய அறைகளில் தங்கி இருந்தவர்களிடம் கூறியுள்ளார்.

இந்த தகவலை அடுத்து அந்த அறைக்கு அருகாமையில் தங்கி இருந்தவர்கள் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டு பொலிஸார் சோதனை நடத்தியுள்ளனர்.

கனடாவில் ஹோட்டலில் குண்டு வைத்ததாக கூறிய நபர் தொடர்பில் வெளியான தகவல்! ;

குண்டு செயல் இழக்க செய்யும் பிரிவு உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சோதனையை நடவடிக்கைகளை மேற்கொண்டர்.

குண்டு பீதியை ஏற்படுத்திய நபர் சம்பவ இடத்தை விட்டு வெளியேறியிருந்த நிலையில் பொலிஸார் அவரை மடக்கிப் பிடித்துள்ளனர்.

4 மணித்தியால சோதனைகளின் பின்னர் அந்த ஹோட்டலில் குண்டு எதுவுமில்லை என்பதை அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர்.

சந்தேக நபரிடம் விசாரணை நடத்தப்படுவதாகவும் குண்டு வைக்கப்பட்டதாக ஏன் கூறினார் என்பது குறித்து இன்னும் தெளிவாக வில்லை எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.






# சமூக ஊடகங்கள் மீள முடியாமல் அடிமையாக்கிவிட்டன அவற்றுக்கு எதிராக மொண்ட்ரீயலில் இளைஞன் வழக்கு

பேஸ்புக், யூடியூப் போன்ற சமூக ஊடகங்களின் பயன்பாட்டில் இருந்து மீள முடியவில்லை, அடிமையாகி விட்டேன் என குறிப்பிட்டு கனடாவின் மொண்ட்ரீயல் பகுதியைச் சேர்ந்த இளைஞர் வழக்குத் தொடர்ந்துள்ளார்.

தற்போது 24 வயதாகும் அந்த நபர் கடந்த 2015 முதல் வுமைவுழம, லுழரவுரடிந, சுநனனவை, இன்ஸ்டாகிராம் மற்றும் பேஸ்புக் போன்ற சமூக ஊடகங்களை பயன்படுத்தி வருகிறார் எனவும், இதனால் உற்பத்தித் திறன் மற்றும் உடல் உருவத்தில் பல பிரச்சினைகளைத் தாம் சந்திக்கின்றார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் அளித்துள்ள முறைப்பாட்டில்ல், நாளுக்கு 4 மணி நேரம் சமூக ஊடக செயலிகளை பயன்படுத்தி வந்தார் எனவும், ஆனால் அதன் தாக்கத்தில் இருந்து விடுபடும் பொருட்டு, 2 மணி நேரமாக குறைத்துக் கொண்டார் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இருப்பினும், தமது உற்பத்தித் திறன் மற்றும் தூக்கத்தில் அதன் தாக்கம் இருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, 2024 இல் வெளியானஓர்ஆய்வறிக்கையில்,ஒட்டுமொத்தமாக 500 மில்லியன் ஆண்டுகளுக்கான சமூக ஊடக பயன்பாட்டினை மனிதகுலம் பயன்படுத்தியுள்ளதாக குறிப்பிட்டுள்ளனர்.

அதனால், இது தனியொருவருக்கான பிரச்சினை அல்ல, இது பலருக்குமான பரவலான பிரச்சனை என்றும் அந்த நபருக்கான சட்டத்தரணி தெரிவித்துள்ளார். மேலும், 7 முதல் 11 வயது வரையான 52 சதவிகித கனேடிய சிறார்கள் சமூக ஊடக பயன்பாட்டில் ஈடுபட்டு வருவகின்றனர் எனவும், அந்த நிறுவனங்களின் உரிமையாளர்கள் தங்கள் பயனர்களின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பிற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும், சமூக ஊடகங்கள் அனைத்தும் தற்போது பயனர்களின் உளவியல் பலவீனங்களைப் பயன்படுத்தி ஆதாயம் தேடிக்கொள்ளும் வகையிலேயே வடிவமைக்கப்பட்டுள்ளன எனவும், நீண்ட நேரம் பயன்படுத்துவதால் அன்றாட வாழ்க்கையில் அதன் பாதிப்பு இருக்கும் என்றும் அந்த சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

# கனடாவில் வீட்டை வாடகைக்கு விட்டு திண்டாடும் வயோதிப தம்பதியர் நிலை

கனடாவில் வீட்டு வாடகை செலுத்தாத குடியிருப்பாளர் ஒருவரினால் வீட்டு உரிமையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றில் தங்கியுள்ள பெண் வாடகைக் குடியிருப்பாளர் சுமார் 41,600 டொலர் வாடகையும் சுமார் 5000 டொலர் நீர் மற்றும் மின்சார கட்டணங்களையும் செலுத்த வேண்டி இருப்பதாகக் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 2020 ஆம் ஆண்டு முதல் இந்த பெண் அந்த வீட்டில் வசித்து வருகிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஒன்றாரியோவின் பிரம்டன் பகுதியைச் சேர்ந்த வயோதிப தம்பதியினர், இந்த வீட்டை வாடகைக்கு விட்டுள்ளனர்.

ஓய்வூதிய முதலீடாக இந்தக் குடியிருப்ப்சிக் கொள்வனவு செய்து தாம்



வாடகைக்கு விட்டனர் எனத் தம்பதியினர் தெரிவிக்கின்றனர்.

எவ்வாறெனினும் குறித்த வாடகை குடியிருப்பாளர் நிலுவை வாடகையை செலுத்தாத காரணத்தினால் தாம் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்க நேரிட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

முதல் 9 மாதங்கள் அந்தப் பெண் சரியாக வாடகை செலுத்தி வந்தார் எனவும் அவர்கள்தெரிவித்துள்ளனர்.

எனினும் அதன் பின்னர் வாடகை கிரமமாக செலுத்தப்படவில்லை. அதனால் அந்தப் பெண்ணை வீட்டை விட்டு வெளியேற்றுவதற்கு அனுமதி வழங்குமாறு வீட்டு உரிமையாளர்கள் சபையிடம் கோரிக்கை விடுத்தனர்.

எனினுன் இந்தக் கோரிக்கைக்கு அனுமதி வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

வாடகை குடியிருப்பாளர் இவ்வாறு நிலுவையைச் செலுத்தாத காரணத்தினால் தாம் பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கி வருகின்றனர் என இந்தத் தம்பதியினர் குறிப்பிடுகின்றனர்.

உரிய முறையில் வாடகை செலுத்தாத நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது தொடர்பில் உரிய திட்டங்கள் வகுக்கப்படவில்லை என அந்தர் தம்பதியினர் வருத்தம் வெளியிட்டுள்ளனர்.



## மொண்ட்ரீலுக்கு வடக்கே ராவ்டோன், கியூவில்

# சீன மர்ம நத்தைகள் பெரும் படையெடுப்பு

மொண்ட்ரீலுக்கு வடக்கே உள்ள ராவ்டோன், கியூவில் வசிப்பவர்கள், அப்பகுதியில் உள்ள நீர்நிலைகளிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் ஆக்கிரமிப்பு நத்தைகள் அதிகரித்து வருவதைக் கவனித்துள்ளனர்.

அவை சீன மர்ம நத்தைகள் (சிபாங்கோபாலுடினா சினென்சிஸ் - Cipangopaludina chinensis) என்று அழைக்கப்படுகின்றன.

அவை நன்னீர் ஆறுகள், நீரோடைகள் மற்றும் ஏரிகளில் ஆபத்தான விகிதத்தில் இனப்பெருக்கம் செய்கின்றன.

”இங்கே நத்தைகளைப் பார்க்க முடிகிறது, ஏனென்றால் அடிப்பகுதி மணல் நிறைந்தது,” என்று அழகிய பிரென்னன் ஏரியின் கரையில் இருந்து ராவ்டன் குடியிருப்பாளர் மைக்கேல் மெக்ஆர்டில் கூறினார். “ஒவ்வொரு நத்தையிலும் 150க்கும் மேற்பட்ட குட்டிகள் இருக்கலாம்.” என்றார் அவர்.

இந்த நத்தைகள் சுற்றுச்சூழல் அமைப்பில் ஏற்றத்தாழ்வை ஏற்படுத்துவதாகவும், குடியிருப்பாளர்கள் அவற்றை மிதிக்காமல் கவனமாக இருக்க வேண்டும் என்றும் அவர் கூறுகிறார்.

““இங்குள்ள ஆமைகள் இப்போது நம்பமுடியாத அளவிற்கு ஏராளமாக உள்ளன. நான் அவற்றைப் பார்த்திருக்கிறேன். அவை நத்தைகளை சாப்பிடுகின்றன,” என்று மெக்ஆர்டில் கூறினார். ”ரக்கூன்கள் மற்றும் நீர் நாய்கள் கூட அவற்றை சாப்பிட விரும்புகின்றன. மேலும் வசந்த காலத்தில், எங்கள் கடற்கரையின் நத்தைகளின் பெருமளவிலான வெற்று ஓடுகளை நாம் காண்கின்றோம். ஏனென்றால் உண்மையில் பிற பிராணிகள் வந்து அவற்றைச் சாப்பிடுகின்றன.”– என்றார்.

நகராட்சி இந்தப் பிரச்சினையை நன்கு அறிந்துள்ளது. மேலும் நத்தைகளை சுத்தம் செய்ய ஓர் உள்ளூர் அமைப்பை அது ஈடுபடுத்தியுள்ளது.

“நாங்கள் அந்த நத்தைகளுடன் வாழப் போகிறோம்” என்று ராவ்டன் மேயர் ரேமண்ட் ரூகோ கூறினார். ”அவற்றை ஒழிப்பது கிட்டத்தட்ட சாத்தியமற்றது, ஆனால் விஷயம் என்னவென்றால், அவற்றின் பெருக்கத்தை – தொகையை ஓரளவு கட்டுப்படுத்த முடியும்” – என்றார் அவர்.

இருப்பினும், நத்தைகள் ஒரு ஏரியில் மட்டும் இல்லை. கியூபெக் மாகாணம் முழுவதும் பல பிராந்தியங்களில் அவை பரவி இருக்கின்றன எனக் கூறப்படுகின்றது.

சீன மர்ம நத்தை தனது சமூகத்தில் உள்ள பல ஏரிகளில் வாழ்ந்து வருவதாக ரூஜியோ கூறுகிறார்.

“அப்புறம் ஏரிக்கு நேர் எதிரே, நீங்கள் பார்க்கிறீர்கள், அங்கே ஒரு கடற்கரை இருக்கிறது. அங்கும் அது பரவியுள்ளது. ஓரிரு நாட்களில் அவர்கள் 2,000 நத்தைகளை அங்கிருந்து எடுத்துச் சென்றனர் என நான் கேள்விப்பட்டேன்” என்று ரூஜியோ கூறினார்.

டினா ஷ்மெல்லர் தண்ணீருக்கு அருகில் ஒரு குடிலை வைத்திருக்கிறார், “2024 இல் நிலைமை மிகவும் மோசமாக இருந்தது. வழியில் அவற்றைப் பார்க்காமல் சில அடிகள் கூட நடக்க முடியாது” என்றாள். ”அவற்றின் ஓடுகள் மிகவும் தடிமனாக உள்ளன. அவை உங்களை நிச்சயமாக வெட்டக்கூடும்.”– என்றும் அவள் எச்சரித்தாள்.




# செயின்ட் லாரண்ட் பவுல்வர்டில் உணவகத்தின் மீது தாக்குதல்!

செயின்ட் லாரன்ட் பவுல்வர்டில் உள்ள மிலானோ பிஸ்ஸேரியாவின் உரிமையாளர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் ஞாயிற்றுக்கிழமை காலையில் உணவகம் சேதப்படுத்தப்பட்டிருப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்தனர்.

சனிக்கிழமை இரவு, கட்டடம் மற்றும் நடைபாதையின் வெளிப்புறத்தில் ஸ்வஸ்திகா குறியீடு மற்றும் இனவெறி வர்ணம் பூசப்பட்டு ஜன்னல்கள் அடித்து நொறுக்கப்பட்டன.

உரிமையாளர் ஜார்ஜ் அபோ பைசல், தாம் இந்த சமூகத்தில் பணியாற்றிய 27 ஆண்டுகளில் இதுபோன்ற ஒரு சம்பவத்தை எதிர்கொண்டதில்லை என்று கூறினார்.

காழ்ப்புணர்ச்சிச் செயற்பாட்டைக் கேள்விப்பட்டபோது அவர் மயக்கமடைந்ததார் என அவர் நண்பர் மார்க் ஹானிக்மேன் கூறுகிறார்.




"யூதராக இருப்பது மற்றும் ஸ்வஸ்திகாக்களைப் பார்ப்பது – வெளிப்படையாக மிகவும், மிகவும் இழிவானது," என்று அவர் கூறினார்.

கிறிஸ் கிங் ஞாயிற்றுக்கிழமை பிறந்தநாள் மதிய உணவைக் கொண்டாடினார். 12 ஆண்டுகளுக்கும் மேலாக இந்த ஸ்தாபனம் குடும்பத்திற்கு பிடித்தமானதாக உள்ளது என்று அவர் கூறுகிறார்.

"எல்லோரும் இங்கு வருகிறார்கள், அனைவருக்கும் உரிமையாளர்கள் மற்றும் பணியாளர்கள் தெரியும், எனவே எங்கள் சுற்றுப்புறத்தில் இது போன்று நடப்பது வெட்கக்கேடானது," என்று அவர் கூறினார்.

